மாலைமணி

ஆசிரியர்

பி.எஸ். இளங்கோ

மூன்று சீட்டு!

இந்திய சர்க்கார் பரிசு பத்திரங்கள் வெளியிட்டு
மூன்று சீட்டு சூதாட்டம் நடத்துகிறது!

விலை 16 கா[illegible]

Anand..

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | சென்னை 27-3-60 | ஒலி 21

தேசாய்! சுப்பிரமணியம்! முனுசாமி!

இந்த நடப்பு ஆண்டுக்கு மூன்று வரவு—செலவுத் திட்டங்கள் வெளியாகி இருக்கின்றன!

இந்திய சர்க்காரின் நிதி அமைச்சர் கனம் மொரார்ஜி தேசாய் இந்தியத் துணைக்கண்டம் முழுவதற்கும் ஒரு வரவு—செலவுத் திட்டத்தைத் தயாரித்துத் தந்திருக்கிறார்!

அதேபோல் சென்னை மாநிலத்து நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் தமிழ் நாட்டிற்கான வரவு-செலவுத்திட்டத்தையும் தயாரித்துத் தந்திருக்கிறார்!

அதேபோல் சென்னை நகரசபை நிதிக்குழுத் தலைவர் திரு. முனுசாமியும் சென்னை நகரத்தின் வரவு-செலவுத் திட்டத்தை தயாரிதது வெளியிட்டிருக்கிறார்!

இத்தனை ஆண்டும் இந்த வரவு—செலவு திட்டங்களை ஒரே ஒரு கட்சி தான் தயாரித்து வந்தது! இந்த ஆண்டு அந்த ஏக போக உரிமை பறிக்கப்பட்டு விட்டது! சென்னை நகரசபையின் வரவு—செலவுத்திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஆண்டு தயாரித்து வெளியிட்டிருக்கிறது!

இந்த மூன்று வரவு—செலவுத் திட்டங்களையும் கட்சி கண்ணோட்டம் செலுத்தாமல் ஆராய்ந்துப் பார்ப்பார்களேயானால் எந்த வரவு செலவுத் திட்டம் சிறந்தது, உயர்ந்தது, போற்றத்தக்கது, பாராட்டத்தக்கது, மக்களை மகிழ வைப்பது என்பதை எளிதில் சொல்லமுடியும்!

இந்திய சர்க்காரின் நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் தயாரித்திருக்கின்ற வரவு—செலவுத் திட்டத்திலும் சரி, சென்னை சர்க்காரின் நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் தாயாரித்திருக்கிற பட்ஜெட்டிலும் சரி, ஏழைக்காக, எளியவர்களுக்காக என்ன நன்மைகளை காணமுடிகிறது!

இந்திய சர்க்காரின் வரவு—செலவு திட்டம் பல்வேறு வரிகளை புதிதாக உற்பத்தி செய்து ஏழைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்க வைத்திருககிறது!

ஆடம்பரச் செலவு—அத்தியாவசிய பொருள் என்ற முறையில் பல பொருள்களுக்கு அதிகப்படியான தீர்வை விதிககப்பட்டிருக்கிறது!

ஆடம்பர பொருள்களுக்குத் தானே வரி விதிக்கப்பட்டிருக்கிறது, அதனல் ஏழைகள் எப்படி பாதிக்கப்படுவார்கள் என்று கேட்கலாம்! சைக்கிள், மோட்டார் சைக்கிள் பணக்காரர்கள் உபயோகப்படுத்தும் பொருள்கள் மட்டுமல்ல—ஏழைகளுக்கும் அது பேருதவியாக இருக்கின்றன!

மின்சார மோட்டர்கள் மீதும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது! மின்சார மோட்டார்கள் பணக்காரர்களுக்கு மட்டும் உரிமையான சொத்தல்ல! ஏழைகளுக்கும் அவைகள் சொந்தம் என்பதை கவனிக்க வேண்டும்! நடுத்தர வகுப்பினர், சிறு சிறு தொழில்கள் செய்யும் சாதாரண மக்கள் மின்சார மோட்டார்களை உபயோகப்படுத்தி வருகின்றனர்! இந்திய சர்க்கார் இந்தத் தொழில்களை பாழ்படுத்தவே முன் வந்திருக்கிறது! நடுத்தர மக்களின் பிழைப்பில் மண்ணை அள்ளிப்போட முனைந்து வேலை செய்திருக்கிறது!

ஏறத்தாழ 60 கோடி ரூபாய் வரை துண்டுவிழும் பட்ஜெட்டை தயாரித்தும் கூட இராணுவச் செலவுக்காக 272 கோடிரூபாய் ஒதுக்கியிருக்கிறது! "சைனுகாரன் எல்லையில் வந்து நிற்கும் நேரத்தில் இது அவசியம் தானே' என்று கேட்கலாம்! 272 கோடி ரூபாயைவைத்துக்கொண்டு சைனுக்காரனை துரத்தியடித்து விடமுடியாது! அதற்கு பல்வேறு வசதிகள் வேண்டும்! எல்லாவற்றையும் விட மனஉறுதி, நாட்டுப்பற்றுதான் மிக முக்கியமாகத் தேவை!

ஆடம்பரச செலவு, ஊழல், வீண்விரையம் இவைகளை கட்டுப் படுத்தினுல் புதிய வ களுக்கு அவசியமே ஏற்பட்டிருக்காது!

வெள்ளையனையும், அயல்நாட்டு சீமைத் துரைகளையும் தோற்கடிக்கும் ஆடம்பரத்தை மேற்கொள்வதால் தான் இந்த அவலநிலை ஏற்பட்டிருககிறது! இது ஒழிந்தாலன்றி இந்தியத் துணைக்கண்டமும், இந்திய துணைக்கண்டத்தில் அடிமைபட்டுக் கிடக்கும் நாமும் நல்வாழ்வு பெற முடியாது!

அடுத்தபடியாக சென்னை நிதியமைச்சர் புதிதாக ஒன்றும் வரிபோடவில்லை என்று பலரால் புகழப் படுகிறது. "அத்தோடு நிற்காமல் அழுகும் பொருள்களுக்கு வரி ரத்து செய்யப்பட்டு விட்டது" என்று ஆனந்தமும் சிலருக்கு ஏற்படுகிறது!

ஏற்கனவே வரிமேல் வரிவிதிக்கப்பட்டு ஏழைகளின் வாழ்வையே பாழ்படுத்தி, அவர்களை சாகடித்து வரும்நிலையில் எப்படி புதிய வரிகளை விதிக்க முடியும்? விதித்தால் எப்படித்தான் மக்களும் கொடுப்பார்கள்!

விலைவாசி விஷம்போல் ஏறிக்கொண்டு வருகிறது! இன்னும் கொஞ்சகாலம் இந்த நிலை நீடிக்குமானுல மக்களிடம் வாங்கும் சக்தியே ஒழிந்து விடும்! இந்த நிலையில் நிதியமைச்சர் புதியவரியை போடுவாரானுல் விதிக்கப்படும் வரிகளை வசூல் செய்ய முடியாமல் தத்தளிப்பார்—அத்தோடு மக்களின் புரட்சிப் புயலிலும் மூழ்கித் திணறுவார் அடுத்தத் தேர்தலில் மந்திரி வேலை மாஜியாகி வெறும் வக்கீல் என்ற பெயரோடு மூலையில் உட்கார வேண்டிய நிலையும் பிறந்து விடும்!

எனவேதான் நிதியமைச்சர் முன் யோசனையோடு புதியவரிகளை விதிக்க முன்வரவில்லை!

புதியவரி விதிக்கப்பட வில்லையானுலும் சென்னை சர்க்காரின் பட்ஜெட் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஒருதுளியும் நன்மை பயக்கும் விதத்திலும் அமையவில்லை!

நாட்டின் வளத்தைப் பெருக்க, நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு வகைசெய்ய எந்த விதமான வழியும். வகையும் செய்யப்படவில்லை!

மத்திய—மாநில சர்க்கார்களின் கிடுக்கித் தாக்குதல்களில் அகப்பட்டு உயிரை விட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு சற்றேர ஆறுதல் தரும் வகையில் நமது நிதிக்குழுத் தலைவர் சிறப்பான, ஏழைகளின் வாழ்வுக்கு ஏற்ற ஒரு வரவு—செலவு திட்டத்தை தயாரித்துத் தந்திருக்கிறார்! இந்த ஆறுதல் தமிழகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் கிடைக்காது, சென்னை நகர மக்களுக்கு மட்டும் தான் கிடைக்கும் என்ருலும் பொதுவாக எல்லோரும் மகிழ்ச்சியடையத்தான் செய்வார்கள்!

அதிகாரம் கொஞ்சமும் இல்லாத நிலையிலும் நகரசபை நிதிக் குழுத்தலைவர் ஏழைகளுக்கு பல்வேறு நன்மைகளை தனது வரவு—செலவு திடடத்தின் மூலம்செய்து காட்டி இருக்கிறார்!

அங்காடி கடைகாரர்களுக்கும், மருத்துவர்களுக்கும், சிறு வருமானம் உள்ளவருக்கும், குறைந்த வாடகை வரும் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் செய்த நன்மைகளை எவருமே பாராட்டாமல், புகழாமல் போற்ருமல் இருக்க முடியாது!

சென்னை நகர மக்களுக்கு கிடைத்திருக்கிற மகிழ்ச்சி தமிழகம் முழுவதும் ஏற்படவேண்டுமானுல் மாநில சர்க்காரிலும் நாம் அமரவேண்டும். அங்கே முனுசாமியைப் போன்ற நம் தோழர் ஒருவர் நிதிஅமைச்சராக இருக்க வேண்டும்! இதற்கான பணிகளை பொதுமக்கள் உடனடியாகச் செய்ய வேண்டும்!

திராவிடம் பிரிந்தால் எப்படி வளமோடு வாழும் என்பதற்கு சென்னை நகரசபை சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட் ஒரு எடுத்துக் காட்டாகும்!

கனம் தேசாய் சமர்ப்பித்திருக்கிற பட்ஜெட்டையும் கனம் சுப்பிரமணியம் வெளியிட்டிருக்கிற வரவு—செலவு,

(12-ம் பக்கம் பார்க்க)

பெரிய பண்டாரம் கேட்டது கொஞ்சம் சின்ன பண்டாரம் கேட்டது அதிகம்!

ஆட்சியாளரை ஆயிரம் கோடி கேட்டது தி.மு.கழகத்திற்காக அல்ல, நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகத் தான்!

சென்னை 86-வது வட்டத்தைச் சார்ந்த அண்ணா படிப்பகத்தின் சார்பில் மேயர் துணை மேயர் பாராட்டு விழாவும், அண்ணா படிப்பக மூன்றாவது ஆண்டு விழாவும் கடந்த 11-3-60 அன்று நடைபெற்றது. அவ்வமயம் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றிய பேருரை—

அறிஞர் அண்ணா பேருரை!

அன்புள்ள தலைவர் அவர்களே!



அருமை தோழர்களே!

வழக்கம் போல மிகவும் நெருக்கடியான இடத்திலே கூட்டம் போடப்பட்டு இருக்கிறது. எப்போதும் முறிந்து விடுவது போல மேடை முறிந்தது. அதனை வழக்கம் போல் சரிப்படுத்த, சரிந்த மேடையை தோழர்கள் சரிபடுத்தி இருக்கிறார்கள். நாற்பது ஐம்பது பேர் என்று மாடிகளிலும் தோழர்கள் கூடியிருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த சீரிய பணியிலே ஈடுபட்டுள்ள தோழர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நான் இந்தக் கூட்டத்திற்கு வருகிற நேரத்தில் பல தோழர்கள் "திராவிட முன்னேற்றக்கழகத்தை மாற்றுக் கட்சிக்காரர்கள் தூற்றுகிறார்களே அதற்கு தக்க பதிலை சொல்ல வேண்டும் அண்ணா" என்று என்னிடத்திலே உள்ள பாச உணர்ச்சியோடு அன்போடு கேட்டுக் கொண்டார்கள்.

தம்பி கருணாநிதி பல கூட்டங்களில் பேசியிருக்கிறார் என்றாலும் இங்கு மிகவும் உணர்ச்சியோடு பேசினார். மாற்றார் திட்டாவிட்டால் இவருக்கு இந்த உணர்ச்சி வந்திருக்காது. எனக்கு அப்படி அல்ல! திட்டினாலும் திட்டாவிட்டாலும் ஒரே மாதிரியாகத் தான் பேசுகிறேன். உணர்ச்சி வசப்பட்டு ஆத்திரத்தின் உச்சியிலே நின்று பேசி எனக்கு பழக்கமில்லை.

மாற்றுக் கட்சித் தோழர்களைக் கேட்டுக் கொள்வேன், திட்டுங்கள், திட்டுங்கள் எங்கள் தம்பிமார்களுக்கு ரோஷம் வரட்டும்! ரோஷம் வருகின்ற அளவுக்கு திட்டுங்கள்! உங்களுக்கே சலிப்பு ஏற்படும் வரையில் திட்டுங்கள் என்று அவர்களை மிக்க வருந்திக் கேட்டுக்கொள்வேன். பணமில்லை என்றாலும் நல்ல மனத்தோடு அவர்களை கேட்டுக் கொள்வேன்.

அடித்து வளர்க்காத பிள்ளையும், திட்டி வளர்க்காத அரசியல் கட்சியும் ஒழுங்கு பெறாது! அவர்கள் திட்டாமல் இருந்தால் நாம் இப்படி வளர்ந்திருப்போமா? அவர்கள் திட்டாமல் இருந்தால் நம்மை பற்றி அவர்களுக்கு நல்லெண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்று பொருள்.

நம்மைப்பற்றி மாற்றார்களும், சில வேளைகளில் உற்றார்களும் நம்மை தூற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தூற்றுகிறார்கள் என்பதற்காக நண்பர் நடராசன் கோபித்துக் கொண்டார்கள். நான் மட்டும் இல்லாவிட்டால் என்ன செய்வேனோ எனக்கே தெரியாது என்று சொல்லிக் காட்டினார்கள். உள்ளபடியே சொல்லுகிறேன் எனக்கு இதைப்பற்றி வருத்தம் இல்லை! எனக்கு இருக்கிற ஒரே வருத்தம் பழையதையே திட்டுகிறார்களே, புதிதாக ஒன்றும் திட்டவில்லையே எனபது தான்!

அண்ணாதுரை, கருணாநிதி ஆசைத்தம்பி போன்றவர்கள் சினிமாவுக்கு கதை எழுதி பணம் சம்பாதிக்கிறார்கள். சினிமாவுக்கு கதை எழுதியே சொந்தத்தில் சொத்துக்களை சேர்த்துக் கொண்டார்கள்! ராயபுரத்திலே சொந்த மாளிகை கழகத்திற்கென்று வாங்கி விட்டார்கள் என்று கூறிவருகிறார்கள். இவையெல்லாம் பழையவை. இப்போதும் அவர்களுக்கு ஒரு ஆறு மாதம் தவணை தருகிறேன். ஏதாவது புதிதாக கண்டு பிடித்து திட்டுங்கள். பழையதை கேட்டு கேட்டு சலித்து விட்டது. புதிதாக திட்டுங்கள் கேட்க ஆசையாக இருக்கிறது. அதைத்தான் மாற்றுக்கட்சிக்காரர்களுக்கு கூறிக் கொள்வேன். பதிலுக்குப் பதில் திட்டவேண்டும் என்று பலருக்கு தோன்றுவது இயற்கை. எனக்கு அப்படிப்பட்ட மனம் இல்லை!

பார்த்தீர்களா, பார்த்தீர்களா அண்ணாத்துரைக்கு தரையில் பாதமே படவில்லை என்றாவது சொல்லுங்கள். அப்போதாவது நான் போகிற போதும், வருகிற போதும் அண்ணாத்துரைக்கு தரையில் பாதம் படுகிறதா, இல்லையா என்று பார்க்கட்டும்!

அண்ணாத்துரை கதை எழுதுகிறான் என்றால் லாபமில்லை. நான் வேலைக்காரி என்னும் சினிமாவுக்கு கதை எழுதினேன். எனக்கு சந்தர்ப்பமும் ஓய்வும் இருக்கிற போது கதை எழுதுவேன் என்பதுஊரறிந்த உண்மை!

உதாரணத்துக்கு ஒன்று சொல்லுவேன். பிறவியிலேயே ஒருவனுக்கு ஒண்ணரைக் கண் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவனைப்பார்த்து ஒண்ணரைக்கண்ணா என்று கேலி புரிந்தால் பிறவி அப்படி என்று அவன் பேசாமல் போய் விடுவான், என்னைப் பார்த்துச் சொன்னால்? கதை எழுதுவது என்னுடைய தொழில் இதைச் சொல்லுவதற்கு நான் ஏன் வெட்கப்பட வேண்டும்?

கள்ளமார்க் கெட்டிலே கொள்ளை லாப மடிக்கிறேன், அரசியல் பேரால் லாப வேட்டையாடுகிறேன் என்று சொன்னால் வெட்கப்பட வேண்டும். சினிமாவுக்கு கதை எழுதுகிறார்கள் என்று சொன்னால் எங்களுக்கு வெட்கமில்லை!

(9-ம் பக்கம் பார்க்க)

ஆண்ட தமிழ் ஆள வேண்டும்! ஆளாத இந்தி அரசோச்ச வேண்டாம்!

ஏற்றம் பெற்ற நம் மொழி எழில் பெற வேண்டும் என்பதே நமது லட்சியம்!

நாவலர் நெடுஞ்செழியன் பேச்சு!

தி. மு. க. ஓட்டல் தொழிலாளர்கள் மன்ற திறப்பு விழா கடந்த 23-2-60 அன்று தோழர் வி. வேங்கடாசலம் தலைமையில் நடைபெற்றது! அவ்வமயம் தோழர்கள் ந. சு. மணி, கதிர் டி. சுப்பிரமணியம், வி. எஸ். கோவிந்தராசன் எம். சி. ஆகியோர் பேசினர்.

பின்னர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பேசினார். அவர் பேசியதாவது:—

அவைத் தலைவர் அவர்களே! மதிப்பிற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே, தொழிலாள நண்பர்களே, மற்றுமுள்ள அன்பர்களே!

புரசை திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்த ஓட்டல் தொழிலாளர்கள் இந்த மாபெரும் கூட்டத்தை கூட்டியுள்ளார்கள். இதில் நான் கலந்து கொண்டு பேசுகின்ற சீரிய வாய்ப்பு அளித்த அருமை நண்பர்களின் முயற்சியைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

உணர்ச்சியோடும், எழுச்சியோடும் ஏற்பாடு செய்திருக்கும் நண்பர்களுக்கு மீண்டும் மீண்டும் மகிழ்ச்சியோடு அருமை தோழர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பகுதியிலே, உணவு விடுதிகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை கோட்பாட்டை உணர்ந்து, அறிந்து இந்தப் பகுதியிலே உள்ளோர் பலரும் நாம் உணர்ந்ததை அவர்கள் உணர வேண்டுமென்று, நாம் அறிந்ததை அவர்கள் அறிய வேண்டுமென்று, நாம் பெற்ற உணர்ச்சி அவர்கள் பெறவேண்டுமென்று, மற்றவர்கள் உணர தி. மு. கழக ஓட்டல் தொழிலாளர்கள் இக்கூட்டத்தினை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கள் மக்கள் மனதிலே ஆழப்பதியும் வகையிலேயும் இந்தப்பகுதியினர் கேட்கவேண்டுமென்றும் இதை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் கருத்துக்கள் மக்கள் உள்ளத்திலே பதிய வேண்டுமானால், கருத்துக்கள் நல்ல முறையில் பரவ வழிவகை செய்ய வேண்டும்.

பலர், இது தொழிலாளர் சங்கமோ என்று ஐயுறக் கூடும், ஒரு கட்சியின் ரீதியிலேயோ, தொழிற் சங்க ரீதியிலேயோ அமைந்ததல்ல! திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பு மன்றங்கள் போல், அண்ணா மன்றம், எம். ஜி. ஆர். மன்றம் என்று இருப்பது போல், திராவிட முன்னேற்றக் கழக சார்பு மன்றங்களில் இதுவும் ஒன்று!



ஒரு கட்சியின் சார்பில் நடத்தப்படுவதாக இது இருந்தால் ஹோட்டல் தொழிலாளர் சங்கமாக இருக்கும். இதற்கு சங்கம் என்று இல்லை—இது மன்றம்!

தொழிற் சங்கமென்றால் தொழிலாளர் குறைபாடுகளை நீக்குவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அதன் வெற்றிக்கு பல போராட்டங்களிலே ஈடுபட்டு வருவார்கள். அதில் அரசியல் கருத்துக்கள் கொண்டோரும், அதில் மதப்பற்று உடையவர்களும், மதப்பற்று இல்லாதவர்கள், கட்சியிலே ஈடுபட்டவர்களும், கட்சியிலே ஈடுபடாதவர்களும் இருக்கக் கூடும்! அதிலே சிலர் நாம் உண்டு, ஹோட்டல் சாப்பாடு உண்டு என்று இருப்பவர்களும் உண்டு! இங்கே இருக்கும் அருமை நண்பர்கள் பல்வேறு நிலையம் போல் திராவிட முன்னேற்றக் கழக பற்றுடைய நண்பர்கள் சீரிய பணியினில் இறங்குகின்ற தன்மையினைக் கண்டு தோழர்களை மீண்டும் மீண்டும் பாராட்டுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை தெளிவாக கூறியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

சென்னையில் மட்டுமல்ல—திராவிட முன்னேற்றக் கழகம் நாள் தோறும், மெள்ள மெள்ள, உறுதியாக பட்டி தொட்டிகளிலும் மூலை முடுக்குகளிலும், இண்டு இடுக்குகளிலும் உறுதியாக வலிவோடும் பொலிவோடும், சீரோடும் சிறப்போடு, பரவுகின்ற நிலையினை பார்க்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வளர்ச்சி இல்லை. என்று நாடாளுகின்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே செத்து விட்டது. அங்கே புதைக்கப்பட்டு விட்டது. மண்ணோடு மண்ணாக ஐநூறு அடிக்கு கீழே புதைக்கப்பட்டு விட்டது. இனிமேல் அதை ஆதரிக்கின்றவர்கள் யார் இருக்கிறார்கள். புரசையிலே இருக்கிறார்களா? சென்னையிலே எங்கும் இல்லை, செங்கல்பட்டிலே இல்லை, திராவிட முன்னேற்றக் கழகம் அழிந்தொழிந்து விட்டது என்ற எண்ணத்திலே இருந்து வருகிறார்கள். அந்த எண்ணத்திலே அவர்கள் நீடுழி காலம் வாழட்டும்! அந்த எண்ணம் வளரட்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இம்மியளவு ஆதரவு இல்லை என்று கூறுகிறார்கள். அந்த எண்ணத்திலேயே அவர்கள் வளரட்டும்! அந்த எண்ணத்திலே இருந்து மாறாமல் வாழட்டும், நாம் வளர்வோம்!

மாற்றுக் கட்சிககாரர்கள் தாக்கிப் பேசினார்கள் என்று நண்பர்கள் வருத்தப்பட்டார்கள். மாற்றாரிடத்திலேயா நாம் மதிப்பை எதிர்பார்ப்பது? வாதியிடமா பிரதிவாதி தீர்ப்பை எதிர் பார்ப்பான்! தீர்ப்பு வழங்க வேண்டியவர் நீதிபதி!

மாற்றுக் கட்சிக்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கவனிப்பதைவிட மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கவனிக்க வேண்டும், நீதிபதியிடம் வாதி, பிரதிவாதியை பற்றி இல்லாததும் பொல்லாதவைகளை கூறுவது போல், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மக்களிடம் கூறுகிறார்கள். கக்கன் என்ன பேசினார், காமராசர் என்னென்ன சொன்னார் என்பதல்ல முக்கியம். அவர்கள் பிரதிவாதிகள் என்றால் நாம் வாதிகள். அவர்கள் வாதிகள் என்றால், நாம் பிரதிவாதிகள். நாம் திராவிட நாடு பிரிய வேண்டுமென்று கூறுகின்ற வாதிகள்—அவர்கள் பிரதிவாதிகள்!

எப்படி வாதி பிரதிவாதியிடத்தில் தீர்ப்பை எதிர்பார்க்க மாட்டானோ அப்படி நாம் நியாயத்தை அவர்களிடத்தில் எதிர்பார்க்க முடியாது! வாதியும், பிரதிவாதியும் நீதிபதியிடம் தீர்ப்பை எதிர்பார்ப்பது போல் நாம் பொது மக்கள் மன்றத்திலே தீர்ப்பை எதிர்பார்க்கிறோம். இரண்டு கட்சிக்காரர்களும் பொது மக்களிடையே தத்தமது கருத்துக்களை வைத்திருக்கிறார்கள். யாருக்கு பொது மக்களின் நியாயம் கிடைக்கின்றது என்பதை பார்க்கிறோம். பொது மக்களின் ஆதரவு நமக்கு நாளுக்கு நாள் வளர்கிறது. மெள்ள மெள்ள வளர்கிறது. உறுதியாக வளர்கிறது!

நமது கொள்கையை பரப்புகின்ற நல்ல பத்திரிகை நமக்கு இல்லை. கழகத் தோழர்களால் நடத்தப்படுகின்ற சிறு சிறு பத்திரிகைகள் மட்டுமே இருக்கின்றன! பெரிய பத்திரிகை வசதி நமக்கு இல்லை.

வானொலியிலே நமது செய்திகளை கூறுகின்ற வசதியில்லை. இந்த வசதி அரசாங்கத்திற்கு உண்டு. அவர்கள் கட்சிக் கொள்

(5-ம் பக்கம் பார்க்க)

தங்கத்தை வெட்டி யெடுக்க கடப்பாரை உதவும்—ஆனால்

நகை செய்வதற்கு கடப்பாரையை பயன்படுத்திக் கொள்ள முடியாது !

(நெடுஞ்செழியன் பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கையை பரப்ப வசதிகள் ஏராளமுண்டு அவர்களுக்கு! இவ்வளவு பேர் இங்கே கூடியிருக்கிறீர்கள். இங்கே பேசப்பட்ட கருத்துக்களை மற்ற பத்திரிகைகளிலே பார்க்க முடியாது. நம்நாடு, தனியரசு போன்ற நமது இயக்க ஏடுகளிலே தான் வரும்.

நான் பேசிய கருத்துக்கள் அவர்கள்பத்திரிகையிலேவராது பேசாத கருத்துக்கள் கூட அவர்களுடைய பத்திரிகையில் வரும், அந்த வாய்ப்பை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இத்தகைய வாய்ப்பும் வசதியும் இல்லாமல் கழகக் கொள்கை வளர்ந்து வருகிறது. நமக்கு இருக்கிற ஒரே ஒரு வாய்ப்பு இந்தக் கூட்டம் தான். அறிஞர் அண்ணா பேசினாலும், அன்பழகன்பேசினாலும்சம்பத்பேசினாலும் அவர்கள் கருத்தை இந்தக் கூட்டத்திலே தான் கேட்க முடியும். பத்திரிகை பலம், ஆட்சி பலம், நமக்கு இல்லை! இவை அத்தனையும் மீறி கழகம் வளர்ந்திருக்கிறது!

நாம் எடுத்துச் சொல்லும் நமது கொள்கைகள் நீதி நேர்மையானவை!

ஆண்ட தமிழ் ஆள வேண்டும், ஆளாத இந்தி ஆள வேண்டாம் என்கிறோம் நாம்! அவர்கள் இந்தி வாழ வேண்டும், வளர வேண்டும் என்கிறார்கள்.

நமது நாடு, நமது மொழி என்னும் உண்மை உணர்ச்சி தன்மானம், தன் மதிப்பு உயரவும், ஏற்றம் பெற்ற நம் மொழி எழில் பெறவும், புத்துணர்ச்சி பெறவும், இழந்த பெருமையை மீண்டும் பெற்று பொலிவு பெற வேண்டு மென்பதை நாட்டு மக்கள் மெள்ள மெள்ள உணர்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் உறுதியாக வளர்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகம்] வளர்ந்து விட்டதா என்று கேள்வி கேட்டு, இல்லை, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு செல்வாக்கு இல்லை என்று மாற்றுக் கட்சிக்காரர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டு மக்கள் அந்தக் கருத்திலே இல்லை? பொது மக்களின் அமோக ஆதரவு, செல்வாக்கோடு நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறோம்!

ஐம்பதிலே இல்லாத வளர்ச்சியை ஐம்பத்தி ரெண்டிலே பெற்றோம், ஐம்பத்தி ரெண்டிலே இல்லாத வளர்ச்சியை 54-ல் பெற்றோம்! 54-ல் இல்லாத வளர்ச்சி 57-ல் பெற்றோம், 59-ல் இல்லாத வளர்ச்சியை 60-ல் பெற்றிருக்கிறோம்.

நமது வளர்ச்சியின் வேகம் 49-50ல் இரண்டரை மைல் வேகமென்றால் 50-52ல் ஐந்து மைல் வேகம் 52-54-ல் பத்து மைல் வேகம், 54-57-ல் பதினைந்து மைல் வேகம், 57-59ல் இருபது மைல் வேகம், 59-60ல் இருபத்தி ஐந்து மைல் வேகம் இருக்கக் கூடும்!

1945-லே இல்லாத வளர்ச்சி 55 விரைவு அதிகம். 49-லே இல்லாத வளர்ச்சி 60லே பெற்றிருக்கிறோம். அந்த வளர்ச்சி! மிக மிக விரைவான வளர்ச்சி! அப்படி நாம் வளர்ந்து கொண்டு வருகிறோம்! ஆனாலும் நாம் வளர வேண்டிய அளவு வளரவில்லை காங்கிரஸ் கட்சி வீழ வேண்டிய அளவு வீழ்ச்சி பெறவில்லை! அவர்கள் வீழ்ச்சி நிலை நமது வளர்ச்சி! காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சி 75 சத விகிதம் என்றால் நமது வளர்ச்சி நிலை 25 சத விகிதம். இந்தக் கூட்டத்தில் முதல் முதலாக நமது கொள்கைகளை கருத்துக்களை அறிந்து கொள்ள வந்திருப்பவர்கள் இருக்கக் கூடும். சில செவிகள் கேட்டு சிந்திக்க தொடங்கி இருக்கக் கூடும். பார்க்க வேண்டும் என்பவர்களும், பார்த்து விட்டுத் தான் வரலாமே என்று எண்ணி இங்கே வந்திருக்கக் கூடும். நமது கருத்துக்கள் நுழையாத செவிகள் இங்கே பலபல உண்டு நமது கருத்துக்களை முழுக்க முழுக்க ஏற்றுக் கொண்டவர்களும் உண்டு! நாம் நமது கருத்துக்களை தூவப்படாத சிற்றூர்கள் பேரூர்கள் இல்லை, நமது கருத்து விதைகள் பரவிய இடங்கள் சில பல உண்டு!

நமது கருத்துக்கள் சில ஊர்களிலே விதைக்கப்பட்டிருக்கிறது. சில ஊர்களிலே முளை விட ஆரம்பித்திருக்கின்றன! இன்னும் சில ஊர்களிலே இரண்டு இலை விட்டு செடியாகும் நிலையிலே இருக்கின்றன.

செடியாக இருந்த சில பல ஊர்களிலே இன்று பெருஞ் செடியாக இருக்கின்றன. இன்னும் சில ஊர்களிலே செடி—மரமாகி இருக்கின்றன. சில ஊர்களிலே இப்போது தான் பூக்க ஆரம்பித்திருக்கின்றன. இன்னும் சில ஊர்களிலே பூத்து காய்க்கத் தலைப்பட்டிருக்கின்றன. சில ஊர்களிலே காய் கனிய ஆரம்பித்திருக்கின்றன. சென்னையிலே நமது கொள்கை பழுக்கத் தலைப்பட்டிருக்கிறது!

சென்னையிலே பழுக்க வேண்டிய அளவுக்குபழுகவில்லை. இலை விட்ட இடம் செடியாக வளரும், செடி மரமாகும். மரத்தில் பூத்து காய்க்க ஆரம்பித்தது. காய் பழுக்க ஆரம்பித்து பலன் அளிக்க தலைப்பட்டிருக்கிறது!

காங்கிரஸ்காரர்கள் நாம் வீழ்ந்து விட்டதாக தப்புக் கணக்கு போடுகிறார்கள், அவர்கள் தப்புக் கணக்கு போடட்டும்; நாம் நல்ல கணக்கையே போடுவோம், அவர்கள் இழித்தும்பழித்தும்கேலியும்கிண்டலும்புரிகிறார்கள் அந்த எண்ணத்திலே பல்லாண்டு காலம் வாழட்டும் என்று திரும்பத் திரும்பக் கூறுகிறோம்!

வட நாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது என்னும் கருத்து பழைய கருத்து என்று கூறுகிறார்கள். இப்போது அந்தக் கருத்தை மெள்ள மெள்ள புரிந்து கொண்டு வருகிறார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்னாலே ஒப்புக் கொள்ளாதவர்கள் இப்போது ஒப்புக் கொள்கிறார்கள். நமது கொள்கையிலே ஐயப்பாடு கொண்டவர்கள் இன்று அக மகிழ்ச்சிக் கொள்கிறார்கள். நம்மை ஏறெடுத்து பார்க்க மறுத்தவர்கள், ஏற்க மனம் இல்லாதவர்கள் ஏசிப் பேசியவர்கள், இழித்தும் பழித்தும் கூறியவர்கள் அத்தனை பேரும் நமது கருத்தை ஏற்றுக் கொள்கிறார்கள்.

நாம் எடுத்து வைக்கின்ற கருத்துக்கு கருத்து ஈடு வைக்க மாற்றுக் கட்சிக்காரர்களாலே முடியவில்லை. அப்படி இருந்தும் நாம் வீழ்ச்சி பெறுகிறோம் என்று கூறுகிறார்கள், அவர்கள் அந்த எண்ணத்திலே நீடூழி காலம் வாழட்டும்!

நாம் கேட்பது திராவிட நாடு திராவிடருக்காக வேண்டுமென்பது. இதைக் கூறுகின்ற போது, அவர்கள் 'ஒன்றிலிருந்து பிரிந்து போகிறார்கள்' என்று குறை கூறுகிறார்கள்.

இந்தப் பந்தல் அமைப்பதற்கு சவுக்கு மரங்களை உபயோகித்து இருக்கின்றீர்கள். நான்கு பகுதிக்கு நான்கு துண்டை வைத்து பந்தல் அமைத்து இருக்கிறீர்கள். இதில் நம்முடைய சவுக்கு துண்டும் இருக்கிறது அதை எடுக்கின்ற போது பார் பார் ஒரே மரமாக இருக்கிறது. இதை எடுத்துக் கொள்கிறார்களே என்று கூறுகிறார்கள், அவர் சொல்லுவது போல் இந்தியா ஒன்றாக வளர்ந்ததா? மரம் இயற்கையில் தானாக வளர்ந்தது. இந்தியா ஒன்றாக வளர்ந்தது என்பது ஒன்றாக வளர இயன்ற ஒன்று.

இந்தியா ஒன்றாக வளர்ந்தது என்பது இந்த பந்தல் போல! நான்கு துண்டுகளை வைத்து. வெள்ளைக்காரன் நிழலுக்கு பந்தல் போட்டான். இன்று அவன் வெளியேறி விட்டான். நிழலுக்காக போடப்பட்ட பந்தலுக்கு ஆதாரமாக இருக்கும் கழிகள் என்னுடைய மரத்தைச் சார்ந்தது. அந்த நிழல் எனக்கு பயன்படவில்லை வடநாட்டு கொள்ளைக்காரர்களுக்கு பயன்படுகிறது என்று கேட்கிறோம்.

583 சமஸ்தானங்களை, ஆற்காடு நவாப், திப்புசுல்தான், சிராஜ்உத்தௌலா, மீர்ஜாகாலிப், சீக்கியர்கள் மற்றவர்கள் ஆண்ட பகுதிகளையும் இணைத்து பல மூங்கில்களை வைத்து பந்தல் போடுவது போல் அகில இந்திய மார்க்கெட்டுக்காக அவனுடைய சரக்கு விலை போக ஒன்றாகக் கட்டினான்.

இப்போது நீங்கள் சொல்லுகின்ற உவமை பொருந்தாது. நாங்கள் சொல்லுகின்ற உவமைப் பொருந்தும்.

அவனுடைய வசதிக்காக இந்தியாவை ஒன்றாக்கினாலும் இந்தியா ஒன்று என்பது வளர்ந்து வந்த ஒன்று அல்ல! பல வசதிகளுக்காகக் கட்டிய பந்தல், அந்த நிழல் நமக்கு பயன்படவில்லை. ஆகவே கட்டியக் கட்டை அவிழ்க்கிறோம்! இந்திய ஆட்சியிலே இருந்து விடுபட விரும்புகிறோம்!

திராவிடம் பிரிந்து பெறுகின்ற ஒன்று கூட அல்ல!

இந்தியா விடுதலை பெற்று சுதந்திர நாடாக இருப்பதற்கு நாங்கள் தானே காரணம்! எங்களால் தானே வெள்ளைக்காரன் வெளியேறினான் என்று கூறுகிறார்கள். அந்த தேசிய உணர்ச்சிக்கு வழி அமைத்தவர்களை பாராட்டுகிறோம், போற்றுகிறோம்.

பூமியிலே இருக்கின்ற தங்கத்தை வெளியே எடுத்து வருவதற்கு கடப்பாரை தேவை தானே என்கின்றனர் காங்கிரஸ் கட்சியினர்! தங்கக் கட்டியை பூமியிலே இருந்து வெளியே எடுத்து வருவதற்கு கடப்பாரை பயன்படும் ஆனால் தங்கத்தை நகையாக்குவதற்கு கடப்பாரை பயன்படாது!

ஆகவே நமக்குரிய தங்கத்தை நாம் பெறுவோம். அதை நகையாக்க வேண்டுமானால் சிறிய அறம் தேவை! சிறிய சுத்தி வேண்டும்! சிறிய ஊதுகுழல் தேவை! சிறிய கொரடா தேவை அதற்கு பெரிய கடப்பாரை பயன்படாது! அதைப் போல் தான் நமக்கு அகில இந்திய தேசியம் பயன்படாது என்பது!

இந்தியா சுதந்திரம் அடைந்த போது அறிஞர் அண்ணா அவர்கள் 1947-ம் ஆண்டில் பெற்ற சுதந்திரத்தை வாழ்த்தி, உழைத்தவர்களுக்கு பாராட்டு தெரிவித்து அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தி மகிழ்ச்சி தெரிவித்து பன்னிரெண்டு பக்கத்தில் கட்டுரை ஒன்று எழுதினார்.

எந்தக் காமராஜர், தூத்துக்குடியில் வெற்றி பெற பெரியாரின் தயவை நாடினாரோ எந்தக் காமராசருக்கு நண்பராக

(7-ம் பக்கம் பார்க்க)

சுடுகாட்டுச் சாம்பல்

பி. எஸ். இளங்கோ

அத்தியாயம்-34.

கர்னல் தாமசின் இராணுவப் படை சரியாக காலை 6—மணிக்கு சர்க்கார் கோட்டையை முற்றுகை யிட்டது! கர்னல் தாமஸ் குதிரை மீது அமர்ந்தபடியே இராணுவ வீரர்களுக்கு கட்டளையிட்டுக் கொண்டிருந்தான்! கோட்டையி லிருந்த காவல் படையினருக்கும், கர்னல் தாமசின் இராணுவ படை யினருக்கும் கடுமையான துப் பாக்கிப் பிரயோகம் நடைபெற் றது!

கர்னல் தாமஸ் முதலில் துப் பாக்கிப் பிரயோகம் செய்யத் தயங்கினுன்! நிலைமை மோச மாக மாறி விடவே நாட்டின் நன் மைக்காக துப்பாக்கிப் பிரயோ கத்தை ஆரம்பித்தான்! வேல்விழி யும், பாண்டியனும் விடுதலைக் கொடியை ஏற்றுவதற்காக அங்கே கொடியோடு நின்று கொண்டிருந் தனர்!

கர்னல் தமசின் கிடுக்கித் தாக்குதலை சமாளிக்க முடியாமல் கோட்டைக்காவல் படையினர் சரணுகதி அடையும் கட்டத்திற்கு வந்து விட்டனர்!

கோட்டைக்குள் தாமசின் படை நுழைந்தது! கோட்டைக் காவல் தளபதியை, கர்னல் தாமஸ் முத லில் கைது செய்துவிட்டு உள்ளே நுழைந்தார்!

பாண்டியன் விடுதலைக் கொடியை கோட்டை மீது பறக்க விடுவதற்காக கோட்டை கொடி மரத்தின் மீது ஏறினுன்! அந்த நேரத்தில் எங்கிருந்தோ ஒரு துப் பாக்கிக் குண்டு அவன் மீது பாய்ந்தது! ஆம், இதயத்திலே பாய்ந்து விட்டது! ஆனுல் கையி லிருந்த கொடியை கோட்டை மீது பறக்கவிட்டு—அது ஆடி கம்பீர மாக பறக்கும் காட்சியை கண் ணுல் பார்ப்பதற்குள் பாண்டியன் கீழே சாய்ந்தான்! ஆம், இரத்த வெள்ளத்தில் மிதந்தான்!

“ஐயோ அத்தான், ஐயோ அத் தான்” என்று அலறி துடித்த படியே பாண்டியனை தன் மடியில் படுக்க வைத்துக்கொண்டு கதறி ஞள், கன்னத்திலும், முகத்திலும் அடித்துக் கொண்டாள்! என்ன செய்வது? யார்பதறிஞலும், துடித் தாலும்துவண்டாலும் இனிபாண்டி யன்கிடைக்கப்போவதில்லை! அந்த உத்தமனைப் போல் இனி ஒரு தியாகி பிறக்கப் போவதுமில்லை.

நாடு விடுதலையடைய வேண் டும், நாட்டு மக்கள் நல்வாழ்வு பெறவேண்டும்என்று தினம் தினம் கனவு கண்டு வந்த பாண்டியன் நாடு விடுதலைப் பெற்ற காட்சியை கோட்டை மீது விடுதலைக் கொடி பறந்திடும் பெருமைதரும் மாட் சியை அவன் காண முடியவில்லை சாவு என்னும் கொடிய அரக்கன் அந்த உத்தமனின் உயிரைக் குடித்து விட்டான்!

வேல்விழி மூர்சையிழந்து கீழே வீழ்ந்து விட்டாள்! “அத்தான் அத்தான்” என்று ஈனக்குரலில் அவளுடைய வாய் ஒலித்துக் கொண்டிருந்தது!

கர்னல் தாமசுக்கு பாண்டியன் கொல்லப்பட்டான் என்ற செய்தி எட்டியவுடன்—அங்குள்ள அதி காரிகளையும், இதுவரை நாட்டை குட்டிச் சுவராக்கி வந்த ஆட்சியா ளர்களையும் கைது செய்து காவ லில் வைக்கும்படி உத்திரவிட்டு விட்டு ஓடிவந்தான்! பாண்டியன் பால்வடியும் முகத்தோடு :பகுத் தறிவு கொள்கைகளைப் போதித்து வந்த பாண்டியன் சுருண்டு துவண்டு கிடந்த காட்சியைக்கண் டான்! “ஐயோ பாண்டியா! ஐயோ பாண்டியா” என்று அலறிஞன்! அவனை தூக்கி தன் மீது சாய்த் துக் கொண்டு புலம்பினுன்! திரும் பிப் பார்த்தான், வேல்விழி மூச்சை யிழந்து கிடந்தாள்! தண்ணிர் கொண்டுவரச் சொல்லி முகத்தில் தெளித்தான்! அப்போதும் அவள் நினைவு பெறவில்லை! ஆம், அவ ளும் போய்விட்டாள்! தன் ஆரு யிர் அத்தானேடு அவளும் சென்று விட்டாள்!

முடிவில் இராணுவ மரியாதை யுடன் இருவரையும்அடக்கம்செய் யப்பட்டது! நாட்டு விடுதலைக்சாக பாடுபட்டவர்கள் வெந்து தணிந்து சுடுகாட்டுச் சாம்பலாகி விட்டார் கள். ஆனுல் சுடுகாட்டுச் சாம்ப லாக்கி கிடந்த நாடு நல்வாழ்வு பெற்றுவிட்டது! அதை பாண்டிய னும்,வேல்விழியும் பார்த்து,பரவச மடைந்து மகிழ்ச்சியடைய முடியா விட்டாலும் நாட்டு மக்களாவது நல்வாழ்வு பெற்றனரே என்ற மகிழ்ச்சி அவர்களுக்கு பெரும் சாந்தியை அளித்திடும் அல்லவா?

அத்தியாயம்--35

மறுநாள் காலையில் மங்கள வாத் தியம் முழங்கிக் கொண்டிருந்தது. கர்னல் தாமஸ்ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் வைபவத்தைக் காண இலட்சக் கணக்கான மக்கள் கோட்டை வாயிலின் முன்பு கூடி இருந்தார்கள் !

கர்னல் தாமசும், அவனுடைய பாதுகாவலரும், இராணுவ படை அதிகாரிகளும் அதிகாரத்தை ஏற்கு முன்பு பாண்டியனுடைய சமாதிக்கு சென்று பாண்டிய னுக்கும், வேல்விழிக்கும் மலர்மாலை சூட்டி மரியாதையை தெரிவித்துக் கொண்டு கோட் டைக்கு திரும்பினர்!

கர்னல் தாமஸ் கோட்டைக்குள் நுழைந்த வுடனேயே “மக்கள் தொண்டன் கர்னல் தாமஸ் வாழ்க, ஏழை பங்காளன் தாமஸ் வாழ்க” என்று வானமதிர மக்கள் முழக்கம் செய்தனர். பூமாரி பொழிந்தனர்! எல்லோருக்கும் வணக் கம் தெரிவித்து பதவி ஆசனத்தில் அமர்ந்து பதவி பொறுப்பை ஏற்றுக் கொண்டு மக் களுக்கு உறுதி மொழியளித்தான்!

அன்புள்ள தோழர்களே, தாய்மார்களே நமக்கு வழி காட்டியாக இருந்த பாண்டியனும், வேல்விழியும் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார் கள்! ஆனுல், அவர்கள் வகுத்துத் தந்த வழி நம் மையெல்லாம் வாழவைக்கும் வழியாகும்! அந்த உத்தமர்கள் வழிநின்று, சிறிதும் சுயநலம் பேணுது ஆட்சி புரிவேன் என்ற உறுதியை உங்களுக்கு அளிக்க விரும்புகிறேன்!

நமது தாயகம் விடுதலை பெற்று விட்டது! அந்நியர்களிடமிருந்து மீண்டு விட்டது! இனி இங்கே பசிஇருக்காது,பட்டினி இருக்காது வேலையில்லாத்திண்டாட்டம்இருக் காது! உங்கள் வாழ்வு வளம் பெற எல்லாவகையிலும் பணி புரிவேன்!

அதோ கோட்டை மீது பறந் தாடும் நமது விடுதலைக் கொடி உயிர் தியாகம் செய்து ஏற்றிவைக் கப்பட்ட கொடியாகும்! அந்த கொடியின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்! நமது தாயகத்தை பொன் விளையும் பூமியாக்கி உங் கள் வறுமையை ஒரு நொடிப் பொழுதில் போக்க முயற்சிப் பேன்!

இன்று முதல் இங்கு ஆண் டான், அடிமையில்லை! ஏழை பணக்காரனில்லை! எல்லோரும் ஓரினம்! எல்லோரும் ஓர்குலம்!

நிலமில்லாதவர்களுக்கு நிலம் வழங்கபட்டடும், வீடு இல்லாதவர் களுக்கு வீடு தரப்பட்டும், வேலை யில்லாதவர்களுக்கு வேலை தரப் படும்! இல்லை என்ற சொல்லே நம் தாயகத்தில் இனி இருக்காது! அதற்கான பணியில் நான் உட னடியாக ஈடுபட இருக்கிறேன்! உங்கள் ஒத்துழைப்பையும் நாடு கிறேன்! உங்கள் ஒத்துழைப்பை தாரீர், தாரீர் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்!

வாழ்க மக்கள் தொண்டன்!

வாழ்க புரட்சி வீரன்!

வாழ்க ஏழை பங்காளன்!

மக்கள் இப்படி ஒலித்த வண் ணம் நாட்டிலே நல்லாட்சி ஏற் பட்டு விட்டது என்ற மகிழ்ச்சி யோடு வீடு திரும்பினர்!

(முற்றும்)

காங்கிரசின் அகில இந்திய தேசியம் தென்னாட்டை வாழ்விக்காது வட நாட்டைத் தான் வாழ்விக்கும்!

(நெடுஞ்செழியன் பேச்சு)

5-ம் பக்கத் தொடர்ச்சி

இருக்கிறாரோ அந்தப் பெரியார் அன்றும் இன்றும் ஆகஸ்ட் பதினைந்தாம் தேதியை துக்க நாள் என்று கூறுகிறார்!

ஆகஸ்ட் பதினைந்து துக்க நாள் அல்ல மகிழ்ச்சி நாள் என்று அண்ணா கட்டுரை வரைந்தார்,

சுதந்திரம் வந்து விட்டது! அந்த ஒரு கட்டமே மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இனி ஒன்றுமே இல்லை என்று காங்கிரஸ் கட்சியினர் கருதிக் கொண்டிருககிறார்கள்.

வெள்ளைக்காரன் சென்றான்· சுயராஜ்யம் வந்தது மகிழ்ச்சி பெறுவோம்!

வெள்ளைக்காரன் அகன்றான்· சுயராஜ்யம் வந்தது! ஆனால் நாம் வளர்ச்சி பெறவில்லை! ஆகவே வடநாட்டுக் கொள்ளைக்காரன் ஒழிய வேண்டும்! அதுவே மகிழ்ச்சி! அந்தக் காலம் வெகு தூரத்தில் இல்லை!

இங்கே இருக்கின்ற ஆட்சியாளர்கள், இங்கிருந்து வரும் வரியை டில்லிககு அனுப்பி விட்டு, தேவையான போது கெஞ்சிக் கேட்டு வாங்கிக் கொள்ளும் நிலையிலே இருககிறார்கள்.

நம்முடைய காசு அழியட்டும்—நயா பைசா வாழட்டும்!

தமிழ் அழியட்டும், இந்தி வளரட்டும்!

வடக்கே இருப்பவர்கள் ஆங்கிலத்தை படிக்கட்டும். இங்கே இருப்பவர்கள் இந்தி படிக்கட்டும்!

டெலிபோன் ஹவுஸ் என்று இந்தியிலே இருக்கட்டும்! மைல் கற்களிலே இந்தி இருக்கட்டும்!

நாம் கொடுத்து வாங்குகின்ற மூக்காலணா கார்டிலேயும் இந்தி இருக்கட்டும்!

மாகாண அதிகாரம் முழுமையும் டெல்லியிடமே இருக்கட்டும்!

வெள்ளைக்காரன் கொடுத்திருந்த மாநில உரிமை கூட டெல்லியே வைத்திருக்கட்டும்!

கொழுத்த வரியெல்லாம் அங்கே போகட்டும்!

நோஞ்சான் வரியெல்லாம் சுப்ரமணியத்திடமே இருக்கட்டும்,

ஏற்றுமதி இறக்குமதி வரி, காப்பி தேயிலை வரி, மண்ணெய் பெட்ரோல் வரி, வருமான வரி. இவை அத்தனையும் மொரார்ஜியே பார்க்கட்டும்!

நோஞ்சான் வரியெல்லாம் சுப்ரமணியம் பார்த்துக் கொள்ளட்டும். இருக்கின்ற வரி முழுமையும் அங்கே அனுப்பி விட்டு தேவையான போது வாங்கி கொள்வோம்!

என்று இருக்கின்ற அகில இந்திய தேசியம் தான் நம்மை வாட்டி வதைக்கிறது! காங்கிரஸ்காரர்கள் பேசுகின்ற அகில இந்திய தேசியம் டெல்லிக்குத் தான் பயன்படும்! நமக்கு பயன்படாது! நம்முடைய வரிப் பணத்தைக் கொண்டு அவர்கள் வாழ்கிறார்கள் அவர்களுடைய வரிப் பணத்தில் நாம் வாழவில்லை!

285 கோடி ரூபாயை ராணுவத்திற்கு என்று செலவழித்து வடநாட்டுக்கு பாதுகாப்பை தேடிக் கொள்கிறார்களே தவிர, தென்னாட்டிற்கு இல்லை.

பாதுகாப்புக்கு என்று நம் வரிப் பணத்திலே ஒதுக்குகிறார்களே, பாதுகாப்பு ராணுவம் சென்னையில் இருக்கிறதா, இல்லை-பெங்களூரில் தான் இருக்கிறதா? கொச்சியிலே இருக்கிறதா? அகில இந்திய தேசியம் பேசுகின்ற வட நாட்டில் தான் எல்லாம் இருக்கின்றன,

எதிரிபடைஎடுத்துவருவானோ என்று எல்லை பாதுகாப்பிற்காக கோடி. கணக்கில்ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அச்சத்திற்காக படைக்கு செலவழிககிறார்கள்—நமக்கா?

வரி கொடுப்பது யார்? கொடுக்கின்ற வரி எங்கே போகிறது? அந்த வரிப்பணத்திலே நாம் வாழ முடிகிறதா? இதனை பொருளாதார நல்லறிவு படைத்தவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், பேசுகின்றவர் நெடுஞ்செழியன் என்பதை மறந்து. இந்த மேடை திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேடை என்பதை மறந்து விட்டு சிந்திக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

ஓநாயும் ஆடும் ஒன்றாக—ஒற்றுமையாக இருக்க முடியுமா? ஆட்டைப் பார்த்து ஓநாய் இருவரும் ஒன்றாக இருக்கலாம் என்று கேட்டால் ஓநாய் நிலையில் ஓநாய் வாதம் சரி! ஆடு சொல்லுமா 'ஓநாயே, ஓநாயே நான் உன்னோடு இருக்கேன். பாதுகாப்பு கொடுஎன்னை பயன்படுத்திக்க! பசி எடுத்தா என்னை கொஞ்சம் கொஞ்சமா சாப்பிட்டுக்க என்று ஆடு கேட்குமா?

வடநாட்டுத் தலைவர்கள் எல்லோரும் பாரத புத்திரர்கள் ஒன்று என்றார்கள்! எப்படி ஒன்றாக முடியும்? வடக்கே உள்ள பக்ரா நங்கல் அணைக்கட்டுக்கு பத்து கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள்!

நமக்கென்று அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் வாதத்திலே அவர்களுக்குள் நியாயம் இருக்கலாம்! ஓநாய் வாதத்தை ஆடு ஏற்குமா? நாம் எப்படி அவர்களோடு சேர்ந்து வாழ முடியும்?

நமக்காகவும். அவர்களுக்காகவும் காந்தியும். நேருவும் சுதந்திரத்திற்காக பாடுபட்டார்கள். அதற்காக பாராட்டுகின்றோம்—தலைவணங்குகின்றோம்!

தன் வாழ்நாளில் தன் உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் அகில உலகம் பிரச்னையை நேரு கவனித்து வருகிறார், அவருடைய கருத்தை உலகம் காது கொடுத்து கேட்கிறது! அதற்காக அவரை போற்றுகிறோம்! பாராட்டுகிறோம்!

அமெரிக்காவில் அடிமைகள் விடுதலைக்காக போராடிய ஆபிரகாம் லிங்கன் போன்ற நமக்கு தொடர்பற்ற விடுதலை வீரர்களை பாராட்டுகிறோம்!

ரஷ்யாவின் சுதந்திரத்திற்காக போராடிய லெனின், ஸ்டாலின் படங்களை வீடுகளிலே வைத்து மகிழ்கிறோம்!

சென்னையில் உள்ள நமது தலைமை அலுவலகத்தில் ஆபிராம் லிங்கன், லெனின், ஸ்டாலின் படங்களை வைத்து மகிழ்கிறோம்!

மேலும் மாசேதுங்—சாக்ரடீஸ், ரூசோ, வால்டேர்போன்றவர்களின் படத்தை வைத்து மகிழ்வதை விட சற்று மேலாகவே நேருவை மதிப்போம்!

ஆனால் நம் கழகக் கொள்கையை இழித்தும்பழித்தும்பேசுகிறபோது, ஜனநாயகத்தை மறந்து அதனை முறித்துபோட்டு விட்டு, கக்கன் நிலைக்கு, அழகேசன்நிலைக்குஇறங்கிவந்தால்கறுப்புக் கொடி காட்டாமல் இருக்க மாட்டோம்!

காந்தி படத்தை அறிஞர் அண்ணா அவர்கள் திறந்துவைத்தார். நேரு படத்தைக் கூட திறந்து வைக்கிறோம்.

இங்கே இருக்கின்ற ஆற்றல் அறிவு அங்கே இல்லை! இங்கே இருக்கிற ராஜதந்திரம் அங்கே இல்லை! அவர்கள் நம்மை இழித்தும் பழித்தும் பேசுகிறார்கள் என்றால் நாம் சும்மா இருக்க முடியுமா?

(8-ம் பக்கம் பார்க்க)

அமிர்தம்

'குறவஞ்சி சிறப்பிதழ்'

1-4-60 வெளிவருகிறது

இருவண்ண முகப்பு

விலை 30 காசு

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், கவிஞர் கண்ணதாசன், பேராசிரியர் அன்பழகன், என்.வி. நடராசன், சிவாஜி கணேசன், 'முரசொலி' மாறன், முல்லை சத்தி, ப.உ.சண்முகம், நடிப்பிசைப் புலவர். கே. ஆர். ராமசாமி, இராம அரங்கண்ணல், ஆசைத்தம்பி, ஓ. ஏ. கே. தேவர், மு. கருணாநிதி, டி. ஆர். பாப்பா, காசிலிங்கம், ஜி.துரை, சாவித்திரி, ஆகியோர் வசனம் எழுதுகிறார்கள்.

அமிர்தம் . . . சென்னை-14.

காங்கிரஸ் வீழ்ச்சி பெற வேண்டிய அளவு வீழ்ச்சியுறவில்லை!

நாம் வளர வேண்டிய அளவு வளரவில்லை!

காங்கிரசின் வீழ்ச்சியே நமது வளர்ச்சி !

(நெடுஞ்செழியன் பேச்சு)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ்காரர்கள், தென்னாட்டிற்கு என்ன செய்யவில்லை. எல்லாம் செய்திருக்கிறோம். என்று கூறுகிறார்கள்.

பெரம்பூர் கோச் பாக்டரியை எட்டு கோடிக்கு கட்டியிருக்கிறார்கள். ஆனால் வடக்கே சித்தரஞ்சனில் இஞ்சின் செய்யும் தொழிற்சாலை ஆசியாவிலேயே மிகப்பெரிய தொழிற்சாலை என்று சொல்லுமளவுக்கு 55 கோடி ரூபாயில் கட்டியிருக்கிறார்கள்.

இருபத்தெட்டு கோடியிலே சிந்திரியில் தொழிற்சாலை, 450 கோடியில் இரும்பு உருக்கு தொழிற்சாலை, பெரிய பெரிய அணைக்கட்டுகள் எல்லாம் வடக்கே! அங்கே கோடிக் கணக்கில் செலவழிக்கிறார்கள்! இங்கே ஆயிரக் கணக்கில் தான் செலவழிக்கிறார்கள்!

இங்கே இருக்கின்ற அமைச்சர்கள் சேலத்து இரும்பை ஆராய்ச்சி செய்து வருவதாக பன்னிரெண்டு வருடங்களாகச் சொல்லி வருகிறார்கள்!

முந்தா நாள் பத்திரிகையிலே டில்லி பாராளுமன்றத்தில் அருமை நண்பர் சம்பத் இதுபற்றி கேட்ட போது உபயோகப்படுத்த வேண்டுமானால் எரிபொருள் இல்லை என்று பதில் கூறி இருக்கிறார்கள்.

குண்டூசி செய்வதற்கு கூட இரும்பு இல்லாத ஜப்பான் இன்று அகில உலக செல்வாக்கை மீறி பெற்றிருக்கிறது!

இங்கே இரும்பு இருக்கிறது. அங்கே அதிகாரம் இருக்கிறது!

எரிபொருள் இல்லாமல் இரும்பை எப்படி உருக்க முடியும்? என்று அமைச்சர்கள் கேட்கிறார்கள்.

இரும்பை வேற்று நாட்டிலே இருந்து வரவழைத்து எட்டாயிரம் ரூபாய் பிரிண்டிங் மெஷினிலே இருந்து ஐந்தணா பேனா வரை தயாரித்து ஒரு நாடு வாழ்கிறது! இரும்பு கிடைக்கின்ற நாட்டில் வாழ முடியவில்லை!

சுதந்திரம் கிடைத்த பன்னிரெண்டு ஆண்டுகளில் தென்னாட்டிற்கு ஒரு கோச்பாக்டரி தானா?

ரஷ்யாவிலே இருந்து புல்கானின், குருசேவ் இந்தியாவிற்கு வந்தார்கள். வந்ததும் கருவேப்பிலை கொத்து போல் ஒன்றே ஒன்று இருக்கும். பெரம்பூர் கோச்பாக்டரியை காட்டினார்கள், மகாபலிபுரத்திற்கு அழைத்துச் சென்று பாருங்கள் எமது பாரதப் பண்பை என்று காட்டினார்கள். இந்தியாவிற்கு வந்த நிக்ஸன், அட்லி, வரோஷிலோவ் அத்தனை பேரும் வந்த போதும் இதைத்தான் செய்தார்கள்.

அருமை காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக் கொள்வேன்! இந்த பத்தாண்டு காலத்தில் நாம் டெல்லிக்கு கட்டிய வரி எவ்வளவு? ஆந்திரம், கன்னட கேரளம், தமிழகம் இந்த நான்கு மாநிலங்களும் சேர்ந்து டெல்லிக்கு அனுப்பிய வரி எவ்வளவு? டெல்லி, இந்த நான்கு மாநிலங்களுக்கும் செய்த நன்மைகள் என்னென்ன? தயவு செய்து இதற்கு புள்ளி விபரம் காட்ட வேண்டும். வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது என்று சொன்னால் வடக்கு வாழவில்லை என்று சொன்னால் மட்டும் போதுமா?

தலாய் லாமா பதினேரு பேர்களோடு இந்தியாவிற்கு வந்த போது அவர்களுக்கு சோறு போட்டு ஆயிரக் கணக்கில் செலவழித்தார்கள்.

1700 மைல் கடல் பரப்பிலே திராவிடத்திற்குத்தான் கடல் எல்லை உண்டு, காஷ்மீருக்கு இல்லை, டெல்லிக்கு இல்லை, பூடானுக்கு இல்லை, நேபாளத்துக்கு இல்லை, நாம் கேட்கும் நான்கு மாநிலங்கள் கொண்ட திராவிடத்திற்குத்தான் கடற் எல்லை உண்டு.

பாதுகாப்புக்கு பணம் செலவழிப்பதாக கூறுகிறார்கள். ஆனால் சீனக்காரன் இந்திய எல்லையிலே மேலும் ஐந்து ரோடுகளை புதிதாக போட்டிருக்கிறான், இதைப்பற்றி நேருவிடம் பாராளுமன்றத்தில் கேட்டபோது நம்மை அறியாமல் சீனக்காரர்கள் வந்து விட்டார்கள் என்று பதில் சொல்லி இருக்கிறார்.

நமது பாதுகாப்புக்கென்று மூன்று பக்கம் கடல் இருக்கிறது. இந்தியாவின் கடல் ஆண்மை வேறெந்த நாட்டிற்கும் இல்லை. நாம் அத்தகைய பெருமையினை பெற்றிருக்கிறோம்.

தென்னகத்தை பொறுத்துத்தான் வடநாட்டிற்கு மதிப்புகூடுதலாகிறதேதவிர—வடநாடு அதனை தேடித் தரவில்லை.

சீனா. இந்தியா மீது படையெடுக்குமானால். திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டைக் காக்கும் பணியிலே நேரு பக்கம் நிற்கும்.

நம் வரியை பயன் படுத்திக் கொண்டு நம் வாழ்வையே அழிக்க முயல்வதால தான் எங்கள் நாட்டை எங்களிடம் கொடுத்து விடுங்கள். எங்களுக்கு விடுதலை தாருங்கள் என்று கேட்கிறோம்.

சில காங்கிரஸ்காரர்கள், நாற்பத்தாறு கோடி மக்களும் ஒன்றாக—ஒற்றுமையாக இருக்கலாம். ஒற்றுமையாக இருந்தால் தான் வலிவு அதிகம் கிடைக்கும். நம்முடைய வலிவைக் கண்டு உலக வல்லரசுகள் அஞ்சும். திராவிடநாடு வந்தால் யாராவது வந்து கொத்திக் கொண்டு போய் விடுவார்கள் என்று கூறுகிறார்கள்!

நான், நாணயமான காங்கிரஸ்நண்பர்களுக்கு சொல்லுகிறேன்,

இந்தியாவின் காலடியிலே இருப்பது போல் இருக்கும் இலங்கை எண்பத்தாறு இலட்சம் கொண்ட நாடு.

பன்னிரெண்டரை இலட்சம் மக்கள் கொண்ட சிங்கப்பூர்—லெபனான்!

லக்ஸம்பர் மூன்று லட்சம் மக்களைக் கொண்ட நாடு. பிரான்ஸ் நாட்டிலே இருக்கும் சின்னஞ் சிறிய நாடு. கடற்கரை இல்லாத நாடு. தரையை நம்பியே வாழ்கின்ற நாடு. மற்ற நாட்டு எல்லையை நம்பி வாழ்கின்ற இக்கட்டான நிலையிலே இருக்கின்ற நாடு நிம்மதியாக வாழ்கிறது. தனது பிரதிநிதியை ஐ.நாவுக்கு அனுப்பி இருக்கிறது. இருபத்தோராயிரம் மக்களைக் கொண்ட மொனக்கோ தனிநாடாகியிருக்கிறது. செங்கல்பட்டிலேபாதி அளவு இருக்கும் சென்மரினோ பதினைந்தாயிரம் மக்களைக் கொண்டது. அது ஆபத்து இல்லாமல் வாழ்கிறது.

அதைவிட மிகக் குறைந்த 5400 மக்களைக் கொண்ட அன்டோரா நாடு உலகத்திலேயே மிகச் சிறிய குடியரசு! இங்கே இருக்கின்ற பஞ்சாயத்து போர்டை போன்றது. பிரான்சுக்கும் ஸ்பெயினுக்கும் இடையே உள்ள மலைப்பகுதி அந்த நாடு சுதந்திரமாக வாழ்கிறது.. இவைகளுக்கெல்லாம் ஆபத்து வரவில்லை. முப்பத்தாறு கோடி மக்களைக் கொண்ட இந்தியாவுக்கு ஆபத்து வந்திருக்கிறது.

இந்தியாவிலேயே குறுகிய காலத்தில் திராவிட நாடு விடுதலைப் பெற்று ஓங்கு புகழ் எய்துவோம் என்று உறுதிகூறுகிறேன்.

ஆகவே நாம்சொல்லி வருகின்ற லட்சியத்தை உணராதவர்களுக்கு உணரவைக்க வேண்டும், தெரிந்து கொள்ளாதவர்களுக்கு புரியவைக்க வேண்டும், அந்த நல்ல பணிக்கு நம்முடைய தோழர்கள் தங்களை ஆளாக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிரித்து, விட்டு விடுவோம்!

காங்கிரசுக் கட்சி உறுப்பினரான சி. ஆர். இராமசாமி அவர்கள் சட்டமன்றத்தில் பேசுகையில், மாநகராட்சி மன்றத்தில் ஆளும் பொறுப்பை ஏற்றிருக்கும் தி. மு. கழகத் தோழர்களை யெல்லாம் 'அமைச்சூர் பாலிட்டீஷியன்கள்' என்று குறிப்பிட்டது. நினைவிருக்கலாம்.

இது பற்றி அண்ணா அவர்கள். சட்ட மன்றத்தில் பேசுகையில் பின் வருமாறு சொன்னார்;—

"அமைச்சூர் பாலிட்டீஷியன்" என்றால், 'இலாபத்துக்காக அரசியலைப் பயன் படுத்தாதவர்கள்' என்று ஒரு பொருளுண்டு. அந்த வகையிலே எங்கள் தோழர்களைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன். "யார் எவர்" என்றுள்ள ஒரு புத்தகத்தில் பார்த்தேன்; அதில் சி. ஆர். இராமசாமி அவர்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது—'திரு சி. ஆர். இராமசாமி ஒரு ஹாபி பாலிட்டீஷியன்' என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"பொழுதுபோக்கு அரசியலில் இருப்பவர் தானே இப்படிச் சொன்னார்! எனவே, இதைக் கேட்டு சிரித்து, விட்டுவிட வேண்டியதுதான்!"

—அண்ணா

'பணம்'-செய்யப்பட்ட வேலைக்குரசீது!

செய்யாத வேலைக்கு அச்சாரம்!

பணம்-ஜால வேடிக்கை என்று எண்ணாதீர்கள்!

(அண்ணா பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சினிமா இருந்தால் தானே அண்ணாதுரை, கருணாநிதி போன்றவர்கள் கதை எழுதி பணம்சம்பாதிக்கிறார்கள் என்று கருதி, சினிமாவை வேண்டுமென்றால் மூடி விடட்டும்! எப்படி எழுத முடியும் என்று பார்க்கட்டும். சினிமாவை மூடி விட்டாலென்ன, நாடகம் இருக்கிறது! நாடகத்தையும் மூடி விட்டால் சந்து முனையிலே உட்கார்ந்து கதை சொல்ல ஆரம்பித்து விடுவோம், கதை சொல்லுகின்ற இடத்திலே ஒரு உண்டியல் கட்டி ஆளுக்கொரு அணா போடுங்கள் என்று சொல்லுவேன், என்னைப் பொறுத்த வரையிலே நான் வெட்கப்பட மாட்டேன்! மக்கள் நல்வாழ்விற்காக, அவர்கள் புரிந்து கொள்கின்ற வகையிலே சொல்லுகிறேன், மக்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்! அவர்கள் கொடுக்கின்ற பணத்தை பெற்றுக் கொள்கின்ற தைரியம் எனக்குக் கூட இல்லை!

நண்பர் ம. பொ. சிவஞானம் அவர்களுக்கு அண்ணாமலை மன்றத்தில் வைத்து ஐம்பது ரூபாய் நிதி கொடுத்தார்கள். அப்போது அவர் 'இந்தப் பணத்தை வாங்கலாமா, கூடாதா என்று யோசித்துப் பார்த்தேன். குடும்பம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது தொடர்ந்து பொது வாழ்க்கையில் இருக்க வேண்டுமானால் இதை பெற்றுக் கொள்ளுவது நியாயம்' என்று கூறினார்! இவ்வளவையும் நான் ஏன் சொல்லுகிறேன் என்றால் என்னிடத்தில் பணம் சேர்ந்து விட்டதாக கூறுகிறார்கள்! உண்மையில் இருப்பதை யெல்லாம் சேர்த்துப் பார்த்தால் ஐம்பதினாயிரம் ரூபாய் கூட இல்லை. ஆனால் இருப்பதாக கருதிக் கொண்டிருக்கிறார்கள்!

காஞ்சிபுரத்திலே இப்பொழுது நடக்கின்ற வேடிக்கையான செய்தியை உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன், என்னிடத்தில் பணம் சேர்ந்து விட்டதாக ஊரார் பேச ஆரம்பித்த உடன், அந்தச் செய்தி பணக்காரர்கள் காதில் விழுந்தவுடன், என்னை பார்ப்பதற்காக வருகின்ற பணக்காரர்கள் நான் உட்காருகின்றவரை அவர்களும் உட்காராமல் நிற்கிறார்கள். நான் உட்கார்ந்தால் தான் அவர்களும் உட்காருகிறார்கள். அப்படிப் பட்ட நிலைமை மாற்றுக் கட்சிக்காரர்களாலே ஏற்பட்டிருக்கிறது, எங்களுக்கு அது தேவை இல்லை! நாங்கள் நடத்துகின்ற பிரச்சாரத்தின் பலன் எந்த அளவு கிடைத்திருக்கிறது. நேற்று எத்தனை பேர் கேட்டார்கள். அவர்களுக்கு புரிந்ததா இல்லையா? நமது கருத்துக்கள் அதிகமாக நாலு பேர் ஏற்றுக் கொண்டார்களா, இல்லை குறைந்ததா? நாம் சொல்லுகின்ற கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர்கள் தொகை நாளுக்கு நாள் வளருகிறதா; இல்லை குறைகிறதா? அந்தக் கணக்கு தான் எங்கள் வளர்ச்சிக்கு வழி காட்டியாக இருக்கின்றது!

பெரியார் ராமசாமியோடு இருக்கின்ற பாக்கியம் கிடைத்த போது நடைபெற்ற நிகழ்ச்சியினை சொல்ல விரும்புகிறேன்.

பெரியார் அவர்கள் பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்து பேசிக் கொண்டு வந்தார். அப்போது பெரியாருக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் முஸ்லீம் வீட்டு பிரியாணிக்கு ஆசைப் பட்டு பாகிஸ்தான் பிரிவினையை ஆதரிக்கிறீர்களா என்று துண்டு அறிக்கை ஒன்று வெளியிட்டு அதன் மூலம் கேட்டார்கள். பெரியார் அவர்கள் 'ஆமாம் பாகிஸ்தான் பிரிய வேண்டும் என்றும் ஆசைப்படுகிறோம், பிரியாணி மீது ஆசை-அதற்கென்ன இப்போது' என்று சொன்னார், அந்த பரம்பரையிலே வந்தவர்கள் நாம்!

திட்டியதால் அவர்கள் என்ன பலன்கண்டார்கள். திட்டிப் பேசியதைக் கேட்டுக் கொண்டதாலே நாம் என்ன பலன் கண்டோம். நண்பர் நடராசனும், கருணாநிதியும் வீரத்தோடும் உணர்ச்சியோடும் பேசினார்கள். ரோஷமும் வீரமும் வளர வேண்டுமானால் மாற்றார் தூற்ற வேண்டும்!

மாற்றார் தூற்றுவதை பற்றி ஒரு துளியும் கவலைப்படாதீர்கள். தூற்றினால் நான் எப்போதுமே கோபப்படாதவன்: வாலிப வயதிலேயே கோபம் வரவில்லை என்றால், எனக்கு இப்போது 51 வயதாகிறது! இப்போதா கோபம் வரப் போகிறது?

ஜஸ்டிஸ் கட்சியாக இருந்த போது அதனை திராவிடர் கழகமாக மாற்ற முயற்சித்த போது நண்பர் திருமலைச்சாமி திருச்சியில் நகரதூதன் என்னும் பத்திரிகையில் என்னைப் பற்றி கேவலமாக எழுதினார். அவர் நடத்தி வந்த பத்திரிகையில் பன்னிரெண்டு பக்கங்களில் பத்து பக்கம் என்னைப் பற்றியே எழுதியிருந்தார். அப்போது எனக்கு கருணாநிதி வயதிருக்கும்! கேவலமாக எழுதியிருப்பதைக் கண்டு பெரியாரிடத்திலே அது பற்றி சொன்னேன். பெரியார் அவர்கள்—

பொது வாழ்க்கையில் ஈடுபட்டால் இப்படித் தான் பலர் பல விதமாக சொல்லுவார்கள். மாற்றுக் கட்சிக்காரர்கள் திட்டுகின்ற திட்டுதலை நாற்பது வயதிற்குள் கேட்டுவிட வேண்டும். அதற்குப் பிறகு எவராலும் அசைக்க முடியாது. திட்டுகிறார்கள் என்றால் அதை கேட்டுக் கேட்டு நமது உடலும் உள்ளமும் உரம் பெற வேண்டும். என்று கூறினார்,

பத்து வருடத்திற்கு முன்னால் என்ன திட்டினார்களோ அதைத் தான் திருப்பி திருப்பி திட்டுகிறார்கள். அன்று எதைக் கேட்டேனோ அதைத் தான் இன்றும் கேட்க வேண்டியிருக்கிறது.

எந்த முறையை கடைப்பிடிக்க வேண்டுமென்று, எனக்கு எந்த பாடத்தை சொன்னாரோ அதே பெரியாரிடம் திட்டு கேட்டுக் கேட்டு என் உடல் வைரம் பாய்ந்து விட்டது.

புதிதாக திட்டுங்கள், கேட்க ஆசையாக இருக்கிறது!

அரைத்த மாவையே அரைக்காதீர்கள், திரித்த கயிறையே திரிக்காதீர்கள், தின்ற சோற்றையே தின்னாதீர்கள்! பார்த்த முகத்தையே பார்க்காதீர்கள்! புதிதாக ஏதாவது கண்டு பிடியுங்கள்: திருத்திக் கொள்ள வேண்டியதாக இருந்தால் திருத்திக் கொள்கிறோம் அதை விட்டு சாமர்த்தியமாக பேசுவதாக எண்ணிக் கொண்டு திட்டியதையே திட்டாதீர்கள்.

உற்றார் உறவினர்கள் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னால் திருந்திக் கொள்வோம்! மனதிலே வைத்துக் கொண்டிருந்தால் திருந்திக் கொள்ள முடியாது. நாம் திருந்திக் கொள்கின்ற நல்ல கருத்துக்களை நமது உற்றார் உறவினர்கள் கூறினால் தோழர்களும் அதை கேட்டு நடக்க வேண்டும். இது வரை சொல்லி வந்தவை பழையவை இதோடு இதை நிறுத்திக் கொண்டு புதிய விஷயங்களுக்கு வருவோம்.

போன தடவை சட்ட சபையில் கவர்னர் உரையின் போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் கவர்னர் உரை நிகழ்த்திய போது வராமல் போனது சட்டசபை ஒழுங்கு முறைக்கு ஏற்றதல்ல என்று காங்கிரஸ் உறுப்பினர் லாசர் என்பவர் சட்டசபையில் ஒழுங்கு பிரசனை கொண்டு வந்ததும், சட்டசபையில் அதைப் பற்றி நிதி அமைச்சர் பேசியதும், கவர்னர் உரையின் போது கதந்து கொள்ளாதது உரிமை பிரச்சினைக்குரியது தானா என்று வி. கே. ராமசாமி 'முதலியார், கல்யாண சுந்தரம், சின்னதுரை போன்றவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் என் கருத்தை சொன்னேன்.

அதற்கு இன்று தீர்ப்பு வழங்கினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் கவர்னர் உரையின் போது கலந்து கொள்ளாதது ஒழுங்கு பிரச்னைக்கு உரியதல்ல—கலந்து கொள்ளாதது குற்றமில்லை என்று தீர்ப்பு வழங்கப் பட்டது

இன்னொரு மகிழ்ச்சியான செய்தி! மாநில சர்க்கார் இந்த ஆண்டில் புதிய வரிகள் போடவில்லை சர்க்கார் என அறிவித்திருக்கிறது.

எதிர் கட்சிகளுக்குப் பயந்து அச்சப்பட்டு புதிய வரிகளை போடவில்லை என்று எதிர்க் கட்சிக்காரர்கள் நினைத்துவிடக் கூடாது என்றும் ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் கூறுகிறார்கள்.

சில காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள் 'சே'சே! இந்த அண்ணாத்துரைக்கு பயந்தா நாங்கள் வரிபோடவில்லை. மக்கள் மீதுள்ள ஆசையினாலேயேபுதிய வரிகளைப் போடவில்லை என்று!

உங்கள் மீதுள்ள ஆசையினாலோ அல்லதுஎங்கள்மீதுள்ள அச்சத்தினாலோ என்று வைத்துக் கொண்டாலும் வரிபோடாமல் இருந்தால் சரி. மகிழ்ச்சி!

மக்கள் மீதுள்ள ஆசையினால் தான் வரிபோடவில்லையே தவிர அண்ணாத்துரையிடமிருக்கின்ற அச்சத்தினால் அல்ல என்று கூறுவார்களானால் இந்த ஆண்டுஅழுகுப் பொருள்களுக்கு வரி இல்லாமல் போனதற்கு யார் காரணம்?

அழுகும் பொருள்களின் மீதுள்ள வரி நீங்க வேண்டுமென்று நாங்கள் தான் கூறினோம். சென்ற ஆண்டு திருவல்லிக்கேணி கடற்கரையில் கூட்டம் போட்டு அழுகும் பொருள்கள் மீதுள்ள வரியை நீக்க வேண்டுமென்று நானும் மற்றுமுள்ள பல கட்சி நண்பர்களும் கூறினோம். அழுகும் பொருள்களுக்கு வரி போடாததற்குகாரணம் அண்ணாத்துரை அல்ல என்று காங்கிரஸ்காரர்கள் சொல்ல முடியாது! ஆனாலும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் மறைக்க முயலுகிறார்கள்.

இன்று நடைபெற்ற சட்ட மன்ற கூட்டத்தில் நண்பர் ப. உ. சண்முகம். நிதியமைச்சர் சமர்ப்பித்திருக்கும் புதிய பட்ஜெட் பற்றி—அதிலே உள்ள குறைபாடுகளை சுட்டிக் காட்டி பேசினார். இந்த விவாதம் இம்மாதம் பதினேழாம் தேதிவரை நடைபெற விருக்கிறது. அப்போது கழகததைச் சார்ந்த நண்பர்களும் நானும் அதைப் பற்றிய கருத்துக்களை எடுத்துச் சொல்ல இருக்கிறோம். இது பற்றி ஆலோசித்து செயற்குழு முடிவை மனதிலே வைத்துக் கொண்டு சட்ட மன்றத்திலே

(10-ம் பக்கம் பார்க்க)

அடித்து வளர்க்காத பிள்ளையும் திட்டி வளர்க்காத அரசியல் கட்சியும் நெடுநாள் நிலைக்காது!

அரைத்த மாவையே அரைக்காதீர்கள்!

திரித்த கயிறையே திரிக்காதீர்கள்!

ஆறுமாதம் தவணை தருகிறேன் புதிதாகத் திட்டுங்கள்!

(அண்ணா பேச்சு)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து தெரிவிக்க இருக்கிறார்கள். இரண்டாவது கட்டத்தை இத்தோடு நிறுத்திக் கொள்வோம்!

நாம் சொல்லி வருகின்ற திராவிட நாடு திராவிடருக்கே என்னும் லட்சியம் நிறை வேறாது என்று மாற்றுக் கட்சிக் காரர்கள் கேலி புரிந்து வருகிறார்கள்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லுவேன். பதினாறு வயது நிரம்பிய வாலிபனை பார்த்து எப்போது கல்யாணம் செய்து கொள்ள போகிறாய் என்று கேட்டால் இப்போதென்ன அவசரம் என்பான். தெருத்திண்ணையிலே உட்கார்ந்து கொண்டிருக்கும் போது கல்யாணம் செய்து கொண்டால் தான் என்ன என்ற எண்ணம் தோன்றும். சினிமா பார்த்து விட்டு திரும்புகிற போது அந்த எண்ணம் வளரும். வளர்ந்தால் கல்யாணம் செய்து கொண்டால் குடித்தனம் நடத்த முடியுமா, அதற்கு தகுந்தார் போல வருவாய் இருக்கிறதா, நமக்கு பெண் கொடுக்கிற இடம் இருக்கிறதா என்று சிந்திப்பான். குடியும் குடித்தனமும் நடத்த திறமை மனப்பாங்கு உண்டா என்று எண்ணிப்பார்ப்பது அவசியம்; அதைப்போல் நாம் நமது லட்சியம் நிறை வேற பாடு படுகிறோம்.

நாம் சொல்லி வருகின்ற திராவிட நாடு திராவிடருக்கே என்னும் பிரச்னை மூலாதார பிரச்னையே தவிர நடை முறை பிரச்னை அல்ல. மேடையிலே நின்று உங்கள் மத்தியிலே பேசி விட்டு சென்று விடுவதல்ல நமது லட்சியம்.

திராவிட நாடு பிரச்னை இப்போது எப்படி இருக்கிறது? போன வருடம் நம் கருத்துக்களைக் கேட்டு நம் பக்கம் வந்தவர்கள் எத்தனை பேர்? நாம் சொல்லுகின்ற கருத்துக்கள் மீது நம்பிக்கை வளர்ந்திருக்கிறதா, குறைந்திருக்கிறதா? என்பதை நாமே அறிந்து கொள்ள வேண்டும்.

நம் வாழ் நாளில் திராவிட நாடு லட்சியத்தில் வெற்றி பெற வேண்டும். அப்போது தான் நமது சந்ததியினர் வீர மககளாக வாழ முடியும் என்று நண்பர் நடராசன் கூறினார்.

தோட்ட வேலை தெரிந்தவர்களுக்கு தெரியும் மாஞ்செடி நட வேண்டுமென்றால் தோட்டத்தில் மாங்கொட்டையை நட்டு. மண்ணைப் போட்டு மூடிவிட்டு வேலி கட்ட வேண்டும். தினம் தினம் தண்ணீர் ஊற்றிக் கொண்டே வர வேண்டும். இலை விட்டு செடி வளருகின்ற போது செடி சரியாக இருக்கிறதா என்று பார்த்து பார்த்து தண்ணீர் ஊற்றுகிறோம். நேற்று தான் பார்த்தோமே, இன்று ஏன் பார்க்க வேண்டும் என்றுயாரும் இருப்பதில்லை.

செடியின் வேர் மேலே வந்திருந்தால் மண்ணைப் போட்டு மூடி உள்ளே மறைத்து விடுகிறோம்,

மனதிற்குப்பட்ட லட்சியத்தை வளர்க்க பாடுபட வேண்டும், மாஞ்செடிவளரவேண்டுமானால் குடம் எடுத்து தண்ணீர ஊற்ற வேண்டும்.

பொதுக்கூட்டம் என்னும் பானையில் பிரச்சாரம் என்னும் பேச்சை தண்ணீராகக்கொண்டு லட்சியம் என்னும் செடியை வளர்ப்பதற்கு உணர்ச்சியோடு, நல்ல எண்ணத்தோடு உங்களிடம் வருகிறார்கள் நல்லவர்கள் நியாயம் தான் என்கிறார்கள். மற்றவர்கள் ஆராய்ந்து பார்க்கிறார்கள். நமது லட்சியம் நாளுக்கு நாள் வளர்கிறது, திராவிட நாடு லட்சியம் நாளுக்கு நாள் வளர்கிறது, வலிவடைகிறது. நமது லட்சியம் வெற்றி பெறும் என்னும் அறிகுறி இப்போது தோன்றி விட்டதாலே அவர்களுக்கு அச்சம் தோன்றி விட்டது. மாற்றுக்கட்சிக்காரர்கள் பேச்சிலேயும் நமது கருத்துக்கள் எங்கெங்கே வருகிறது என்று பார்க்க வேண்டும்,

நல்ல வேளை இங்கே மேடை சரிந்தது! மாற்றுக் கட்சிக் காரர்கள் இதையே பயன் படுத்திக் கொண்டு மேடை சரிந்தது போல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையும் சரிந்து விட்டது பார்த்தீர்களா என்று பேசக்கூடும்!

நீங்கள் பத்திரிகையிலே படித்திருப்பீர்கள் என்று கருதுகிறேன், சட்ட மன்றங்களிலும் பாராளு மன்றத்திலும், உலகத்தோர் பேசுகின்ற பேச்சுக்களில் நமது கருத்துக்கள் இருக்கின்றது!

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சுப்பாராவ் அவர்கள், டில்லி பாராளு மன்றத்தில் பேசும்போது தன் ராஜ்யத்தில் மத்திய சர்க்கார் அக்கறை செலுத்தவில்லைஎன்று குற்றஞ்சாட்டி பேசினார். தமிழ் நாட்டில மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலும் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்னும் கொள்கை பரவலாக பரவி இருக்கிறது! இந்த உணர்ச்சி இப்படிப் பரவினால் நமது கொள்கை வலிவு பெறும்.

பாராளுமன்றத்திலே பேசிய சுப்பாராவ் கழகமல்ல! அங்கு திராவிடநாடு கேட்கவில்லை, எழுந்து பேசினால்—வடக்கு தெற்கு பேதம் தமிழ் நாட்டில் பரவி வருகிறது என்பதை எடுத்துக் காட்டி பேசி தன் மாநிலத்தில் உள்ள குறைபாடுகளை சொல்ல வேண்டி வருகிறது.

கழகக் கருத்துக்கள் மக்கள் உள்ளத்தில் பாய்ந்து, பல கட்சிகளிடையேயும் பரவி பேச ஆரம்பிக்கிறார்கள். நமதுகருத்து ஆந்திர மந்திரி சபையிலும், கேரள மந்திரி சபையிலும் கன்னட மந்திரி சபையிலும் பரவலாக பரவுகிறது.

இன்று சட்டசபையில் சுவையான நிகழ்ச்சி நடைபெற்றது. நண்பர் கருணாநிதி அங்கு இல்லை

மைசூரிலிருந்து பாலாற்றுக்கு தண்ணீர் வரவேண்டும் என்றும் நாம் அதிகமாக தண்ணீர உபயோகிப்பதாக புகார் கூறப்படுகிறதே உண்மைதானா என்று கேட்டபோது மந்திரி அதுபற்றி பரிசீலிக்கிறோம் என்று பதில் சொன்னார்.

கிருஷ்ணா, கோதாவரி நதியிலிருந்து தமிழ் நாட்டிற்கு தண்ணீர் வர ஆந்திரம் சம்மதிக்க வில்லையே ஏன் என்று கேட்டபோது அதற்கு நிதியமைச்சர் பதில் சொல்லும்போது "எல்லாம் திராவிடத்தொல்லைதான்' என்று குறிப்பிட்டார் அகில இந்திய தொல்லைக்காரர்.

திராவிட உணர்ச்சி ஆந்திரத்திலும், கன்னடத்திலும், கேரத்திலும் பரவி இருந்தால் மைசூர் கஞ்சத்தனம் காட்டியிருக்க மாட்டார்கள். ஆந்திரர்கள் மறுத்திருக்க மாட்டார்கள், கேரளத்தார் கண்டிப்புக் காட்டியிருக்க மாட்டார்கள்.

எங்களை மறை முகமாக ஆதரித்து இருக்கலாம்! ஆதரிக்கா விட்டாலும் எதிர்க்காமலாவது இருக்கலாம்!

மைசூரில் நமது லட்சியம் பரவி இருந்தால், மொழி வழி வேறுபட்டு. இன வழி ஒன்று என்னும் கொள்கைப் பிடிப்பு உண்டாகி இருந்தால் நாமும் அவர்களும் ஒன்று தான் என்ற எண்ணம் வளரும். பெரியாறு நமக்கு பயன்படும்—பயன் பட்டிருக்க வேண்டும். பெரியாறு தண்ணீர் கொடுக்க மாட்டேன் என்று பிடிவாதம் காட்டியிருக்க மாட்டார்கள்.

அகில இந்தியா என்று பேசுவதாலே தான் இந்த நிலைக்கு காரணம். இனத்தால் ஒன்றுஎன்று அவர்கள் தெரிந்துக் கொண்டிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது. நிதி அமைச்சர் சொல்லுவது போல் திராவிடத் தொல்லை அல்ல இது. திராவிடத்தை உணராததால் வந்த தொல்லை, பெருந்தொல்லை?

ஏக பாரதம் என்ற உணர்ச்சி பரவி இருப்பதாலே அந்தக் கொள்கை அங்கே வெற்றி பெற்றிருக்கிறது: நமது திராவிடக் கொள்கை உணர்ந்திருந்தால் கேரளத்தார் தடுத்திருக்க மாட்டார்கள், கன்னடத்தார் கஞ்சத்தனம் காட்டியிருக்க மாட்டார்கள்.

மாநில சர்க்காருக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன்.

இன்னும் ஐந்து ஆண்டுகளில் ஆந்திர, கன்னட, கேரளப் பகுதியில் திராவிட உணர்ச்சி பரவ வழி வகை கிடைக்குமானால் இந்த தண்ணீர் பிரச்னை தானாகவே தீர்ந்து விடும்.

இங்கு பேசிய ஒவ்வொருவரும் திராவிடநாடு என்றால் என்ன! திராவிடத்தின் விடுதலைக்கு எத்தகைய உணர்ச்சி தேவை என்பதைப் பற்றியும் பேசினார்கள். பேசுகின்ற பேச்சினால் விடுதலை இலட்சியம் நிறைவேறுமா, நாம் சொல்லிவருகின்ற திராவிட நாடு கிடைகக் கூடியதுதானா, சட்டசபையின் மூலம் அதற்கு வழி வகை செய்ய முடியுமா? அதுதான் நாம் எதிர்ப்பார்க்கும் பலன்? நானோ. நண்பர் கருணாநிதியோ, அன்பழகனோ, ஆலசத தம்பியோ அங்கு ஆட்சியாளருக்கு தொல்லை தர அமர்ந்திருக்கவில்லை. நாம் எதைச் சொன்னாலும் எதிர்த்தே பேசி வருகிறார்கள். அந்த அளவுக்கு மகிழ்ச்சி!

நாலாவதாக நண்பர் கருணாநிதி இங்கு பண்டாரம் கதையைப் பற்றி குறிப்பிட்டார்கள்.

(11-ம் பக்கம் பார்க்க)

பொதுமக்களே! ஆட்சியாளரை அதட்டிக் கேளுங்கள்!

அதைத் தான் கேட்பானேன் - வாய் நோவானேன், என்று பேசாமல் இருந்து விடாதீர்கள்!

(அண்ணு பேச்சு)

(10-ம் பக்கத் தொடர்சி)

நிதிஅமைச்சர் சொன்ன பண்டாரம் கதையை கூர்ந்து படித்தால் புரியும். இரண்டு பண்டாரங்கள் பேசுவதாக குறிப்பிட்டார். நானும் ஒரு பண்டாரம் அவரும் ஒரு பண்டாரம். இந்த பண்டாரம் கதை பற்றி சொல்லுவதற்கு முன் ஒரு பண்டாரத்தின் கதை நினைவுக்கு வருகிறது.

மூன்று பண்டாரங்கள், இரவிலசத்திரத்தில்படுத்துக்கொண்டிருந்தார்கள். எதிரே இருந்த வைக்கோல் போர் தீ பிடிதது பக்கத்திலே இருந்த விடும் எரிந்து கொண்டிருக்கிறது. கொட்டைக்கட்டி பண்டாரம் எழுந்து வீடு எரிவதைப்பார்த்து பககத்திலே இருந்த பண்டாரத்தை எழுப்பி வீடு பற்றிக் கொண்டு எரிகிறது என்றுன், படுத்துக கொண்டிருந்த அந்த சோம்பேறிப் பண்டாரம் எந்தத் தெருவில் என்று கேட்டு விடடு மீண்டும் படுத்துக் கொண்டான் மூன்ருவது பண்டாரம் எதையும் சொல்லாமல பேசாமல் படுத்துக் கொண்டான்.

மறுநாள் மூன்று பண்டாரங்களும எழுந்து வீடுபற்றி எரிந்ததைப் பற்றி பேசிக் கொண்டார்கள், அணைக்கச் சென்றிருக்கலாமே என்றுன் ஒரு பண்டாரம்' மூன்ருவது பணடாரம் அதைத்தான சொல்வானேன், வாய் நோவானேன் என்று பேசாமல் இருந்து விட்டேன் என்றுன்.

நான் முதல் பண்டாரம் போல் நெருப்பு நெருப்பு என்று ஆட்சியாளரின் தகுதியற்ற தன்மையைப்பற்றி கூறுகிறேன். மூன்ருவது பண்டாரம் போல் பொதுமக்கள் இருக்கக்கூடாது.

மூன்ருவது ஐந்தாண்டு திட்டம் பற்றி பேசுகையில், நிதி அமைச்சர் பத்தாயிரம் கோடி செலவழிக்கப் போவதாக கூறினர் இந்தப் பண்டாரம் ஆயிரம் கோடிகேட்டேன்; பெரிய பணடாரத்தால் பெற முடியும்-முடிந்தால் வாங்கட்டும் என்ற எண்ணத்தில்! நிதி அமைச்சர் தன்னையும் சேர்த்துத் தான் பண்டாரம் என்று கூறினர். அன்னக்காவடி பண்டாராமென்ருல் அக்கரை இல்லை! இந்தப் பண்டாரம், மககளுக்கு தேவையானது என்ன, மக்கள் நல்வாழ்விற்கு என்ன வேண்டும், எதை எதிர்பார்க்கிருர்கள் என்று கண்டறிந்து கூறுவதிலேயே கவனததை செலுத்திக் கொண்டிருக்கிருேம். இப்போதுள்ள விலைவாசி, எல்லோருக்கும் தொழில் இருக்கிறதா, தொழிலுக்கேற்ற ஊதியம் கிடைக்கிறதா, நீதி நியாயம் பெறுகிருர்களா என்பதையே நாம் கேட்கிருேம். விலைவாசிகளைக் கட்டுப்படுத்தஆட்சியாளர்களால், அவர்களுடைய பன்னிரெண்டு வருட ஆட்சியிலே முடிந்ததா? இவர்களுடைய ஆட்சியிலே பண்டாரமானுலும் சரி, பாதுஷாவானுலும் சரி நிம்மதியாக வாழ முடிகிறதா?

மக்கள் வயிருர மூன்று வேலை சாப்பிடுவதற்கு சோறு, எல்லோருக்கும் தொழில், தொழிலுக்கேற்ற கூலி, கட்டிப்பிடிக்கும் அளவிலே விலைவாசி இவைகள் இவர்களின் பன்னிரெண்டு வருட ஆட்சியிலே கிடைத்திருக்கிறதா? இதை காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டு போட்டவனுய் இருந்தாலும் சரி. ஓட்டுப் போடாதவனுக இருந்தாலும் சரி காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருப்பதால் கேட்கிருர்கள். காங்கிரஸ் கட்சியினுலே அந்தக் குறைகளை தீர்க்க முடிந்ததா?

பண்டங்களின் விலைவாசி ஏறிக் கொண்டே போகிறதே, விலையை கட்டுப் படுத்த வேண்டாமா என்று நீங்கள் என்னைக் கேட்கிறீர்கள்! நான் சட்டசபையில் மந்திரியைப் பார்த்து விலை வாசி ஏறிக் கொண்டே போகிறதே, விலையைக் கட்டுப் படுத்த வேண்டாமா என்று கேட்கிறேன்,

மந்திரி, திருப்பி என்னை பார்த்து விலையை குறைக்க வேண்டாமா என்று கேட்கிருர்!

மத்திய சர்க்காரிலே இருக்கும் நிதிஅமைச்சர் மொரார்ஜி தேசாயின் பேச்சை பார்த்த போதுஅவரும் இதைத் தான் கூறியிருக்கிருர்—

உற்பத்தி பெருகிக் கொண்டு தான் வருகிறது. என்ன காரணமோ தெரியவில்லை, விலை ஏறிக் கொண்டே போகிறது! இது இப்படித் தான் இருக்கும் என்று.

இப்படிக் கூறுபவர்கள் தான் தங்கள் ஆட்சியை நல்லக் ஆட்சி என்று சொல்லிக் கொள்கிருர்கள். முன்னேறிக் கொண்டு வருகிற எங்கள் கட்சியைப் பற்றி குறை கூறுகிருர்கள்! அவர்களைப் பற்றி நீங்களும் நானும் என்ன என்று கருதுவது?

முதல் ஐந்தாண்டு திட்டத்தில் இரண்டாயிரம் கோடி செலவழித்தார்கள். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஐயாயிரம் கோடி செலவழித்தார்கள். மொத்தம் ஏழாயிரம் கோடி செலவழித்தார்கள், ஏழாயிரம் கோடி செலவழித்தும் மக்கள் வாழ்வு வளம் பெறவில்லை. விலைவாசிகுறையவில்லை. தொழிலாளர்களுக்கு தொழில் இல்லை, உழைப்புக் கேற்ற ஊதியம் இல்லை. மக்கள் வாழ்வில் மன நிம்மதி இல்லை! இரண்டு ஐந்தாண்டு திட்டம் போட்டும், பன்னிரெண்டு வருட ஆட்சியிலே மக்கள் சுகமாக இருக்க முடிந்ததா?

சின்ன வயதிலே பாலகிருஷ்ணன், கோபியர்கள் வீட்டிலே சென்று வெண்ணெய் திருடினுன். அவர்கள் யசோதையிடம் முறையிட்டார்கள். யசோதை கோபியர்கள் மீது கோபித்துக் கொண்டு என்ன குறைந்து விட்டது, வெண்ணெய்தானே வேண்டும், சட்டிகட்டியாகத்தருகிறேன் என்ருளாம். சின்ன வயதிலே பாலகிருஷ்ணனை கண்டிக்காததால், பாலகிருஷ்ணன்—கோபால கிருஷணனுைதும் பெண்ணையல்லவா திருடினுன்? இன்று காங்கிரஸ் கட்சி பாலகிருஷ்ணன் நிலையிலே இருக்கிறது, ஜனநாயக ஆட்சி நடத்துகிருேம் என்று கூறுகிற இவர்களை கண்டிக்காமல் விட்டு விட்டால் ஜனநாயக ஆட்சி சர்வாதிகார ஆட்சியாக மாறும். இதனை ஆட்சியாளருக்கு உணர்த்த வேண்டும்.

மக்கள் நல்வாழ்விற்கு வழி இருக்கிறது. பத்தாயிரம் கோடி செலவழிக்கப் போகிருேம் என்று சொன்னதாலே எனக்கு ஒரு ஆசை பிறந்தது—ஆயிரம் கோடி கேட்டேன், இதை பண்டார ஆசை என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

பண்டாரத்தின் காதில் வாணச் சத்தம் கேட்டால் எங்கோ திருவிழா நடக்கிறது என்று எண்ணம் தோன்றும். இல்லாவிட்டால் கபாலி கோயிலில் எப்போது திருவிழா, அந்தக் கோயிலில் எப்போது திருவிழா என்று கேட்பான்,

பெரிய பண்டாரம் பத்தாயிரம் கோடி இருக்கிறது எவ்வளவு வேண்டும் என்று கேட்டார், அனுபவமில்லாத சின்னப்பண்டாரமாகிய நான் ஒரு ஆயிரம் கோடி கிடைக்குமா என்று கேட்டேன்.

அவர் சொன்ன பத்தாயிரம் கோடி திருவோட்டில் இருக்கிறதா என்று பார்த்தேன். அதில் ஒன்றும் இல்லை, வெறும் கையினுல் தடவிப் பார்க்கும் நிலையாகத்தான் இருக்கிறது. திருவோட்டில் ஏதாவது விழவேண்டுமென்ருல் டெல்லிக்கு போய் சங்கரா சிவசங்கரா என்றுபாட்டுப் பாடி, நேருவுக்கு நிகர் நேருவே என்று புகழ்ந்தால்—நேரு மனமுவந்து கொடுக்கின்றதை வாங்கி வருகின்ற பண்டாரமாகத்தான் நிதி அமைச்சர் இருக்கிருர்!

அண்ணுத்துரைஆயிரம்கோடி கேட்டது எந்த அளவில் நியாயமானது என்று சிலர் கேட்கிருர்கள்.

நான் கேட்பது நியாயம் தான். மண்டலத்திற்கு மண்டலம் மக்கள் தொகையின் அடிப்படையில் பார்த்தால் நான்கு மாநிலங்களுக்கு சேர்த்து கணக்கிட்டால் ஆயிரம் கோடி தேவை! நாங்கள் சொல்லுவது பொருத்தமானது!

அமைச்சருக்கு மததிய சர்க்காரை தட்டிக் கேட்கின்றதிறன்—பதவியிலே பற்றற்ற உள்ளம் இருந்தால் கேட்ட தொகையை பெறலாம்.

மத்திய சர்க்காரை கண்டித்துக் கேட்கும் நெஞ்சுரம் இவர்களிடம் இல்லை, ஆனல் டெல்லியிடம் பிச்சைக் கேட்பதிலே மட்டும் திறமை சாலிகள்.

ஆயிரம் கோடி ஏன் கேட்டேன்? திராவிடத்தின் வளர்ச்சிக்காக கேட்டேன். ஆயிரம் கோடி கேட்டது —ராஜா சர். முத்தையா செட்டியார் கட்டியுள்ளது போன்ற மாளிகையைக் கட்டி நண்ட நடராசனுக்கு கொடுத்து விடுவதற்காக அல்ல! பெரிய பங்களா ஒன்றை கட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையத்திற்கு கொடுக்க வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.

ஆயிரம் கோடி கேட்டது, லால்குடி நடராசன், மஜீத், தாளமுத்து நடராசன் போன்ற கழக தியாகிகளுக்கு நினைவுச் சின்னம் கட்டி முடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை,

நான் ஆயிரம் கோடி கேட்டது திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக அல்ல—நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகத் தான், நான் ஆயிரம் கோடி வேண்டுமென்று கேட்டேன்.

பூமிக்கடியிலே இரும்பு இருக்கிறது. தங்கம் இருக்கிறது! அலுமினியம் பாக்சைட் இருக்கிறது! காட்டில் சந்தனம் கிடைக்கிறது, தங்கம் கிடைக்கின்ற நாட்டிலே தான் தரித்திரம் இருக்கிறது. இரும்பு கிடைக்கின்ற நாட்டிலே தான் இல்லாமையும் இருக்கிறது.

இங்கு இரும்பு கிடைக்கிறது. ஆனல் இரும்பு உருக்குதொழிற்சாலை இல்லை! வட நாட்டில் நான்கு இரும்பு உருக்குதொழிற்சாலைகள் இருக்கின்றன. சேலத்து இரும்பு இன்று சீரழிந்த நிலையிலே இருக்கிறது.

சேலத்து இரும்பை நான்கு பேர் வெளி நாடடவர்கள் வந்து பார்க்கின்றனர். நாலு பேரில் ஒருவர் இரும்பை எடுத்து பார்த்து விட்டு 'கனம் இல்லை' என்று சொல்லி கீழே போட்டு விடுவார். உடனே அந்தச்செய்திப் போகும்—சேலத்து இரும்பு கனமில்லை என்று சொல்லி விட்டார்கள் என்று,

மந்திரி பார்த்தவுடன் பைல் ஜெர்மனி நிபுணர்களுக்கு செல்லும். ஜெர்மனியிலே அவர்கள் பைலை பார்த்ததும் மேற்கு ஜெர்மனியா, கிழக்கு ஜெர்மனியா என்று குறிப்பிடவில்லை என்று பைலை மந்திரிக்கே அனுப்புவார்கள். மந்திரிகள் மீண்டும் அதிகாரிகளுக்கு பைலை அனுப்புவார்கள்.

(12-ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in CEYLON · இலங்கையில் 20 சதம்
Regd No M. 7074 · விலை 16 காசு · MALAIMANI · Phone No. 83285

மற்ற மாநிலங்களின் உதவி சென்னைக்கு வேண்டுமென்ருல் ஆட்சியாளர்கள் மறைமுகமாக எங்களை ஆதரிக்கட்டும்—இல்லையென்ருல் எதிர்க்காமலாவது இருக்கட்டும்!

(அண்ணு பேச்சு)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி இவர்களது 'பன்னிரண்டு வருட ஆட்சியில் சேலத்து இரும்பு நாய் படாத பாடுபட்டுவருகிறது!

சேலத்து இரும்பை பயன்படுத்தினல் வெளி நாட்டிற்கு எத்தனையோ கோடி டன் அனுப்ப முடியும் என்று நிபுணர்கள் கணக்கிட்டு கூறியிருக்கிருர்கள்.

மூலப் பொருள்கள் இருக்கின்றன. அதனை திறம்பட நடத்த நிபுணர்கள் இருக்கிருர்கள்—உழைப்பை தருவதற்கு தொழிலாளர்கள் இருக்கிருர்கள். நடத்துவதற்கு பணம் இல்லை என்று கூறுகிருர்கள்.

ஏன பணம் இல்லை? பணம் பண்ணுகின்ற வேலை, டில்லியிலே இருக்கிறது!

பணம் என்பது செய்யப்பட்ட வேலைக்கு ரசீது, செய்யப்படாத வேலைக்கு அச்சாரம்!

ஒரு ரூபாய் கொடுத்து பன்னிரெண்டு மாம்பழம் கேட்டால் கடைக்காரன் கொடுக்கிருன். பழத்திற்கு சம்பளமாக ரூபாய் தருகிருர்கள். பணம் என்பது ஜால வேடிக்கை என்று கருதுகிருர்கள். பணம் என்ருல் என்ன, அது எப்படியெப்படி இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் பணத்தோட்டம் என்னும் புத்தகத்திலே எழுதி இருக்கிறேன். படித்தால் புரியும்! அதைவிட்டுவிட்டுரோமாபுரி ராணிகளை படிக்கிருர்கள். பணத்தோட்டம் படிக்காத காங்கிரஸ்காரர்கள் உணருவதற்கு, நீங்கள் வாங்கிக் கொடுத்தாவது படிக்க வைகக வேண்டும்.

பணம் செய்யும் உரிமை டெல்லிக்கு இருக்கிறது, வரவுசெலவு பட்ஜெட்டில் துண்டு விழுந்தால் டில்லியிலே இருக்கிற மொரார்ஜி தேசாய் நோட்டடித்து விடுகிருர்!

நம் மாநிலத்தில் 34 லட்சம் பேர் இருக்கிருர்கள்! இன்று மூன்று கோடி ரூபாய்க்கு நோட்டடிக்கலாமா என்ருல் சென்னை சர்க்காருக்கு அந்த அதிகாரம் இல்லை! அசோகச் சக்கரம் போடுவதற்குப் பதிலாக காமராசர் தலையை போட்டாலும்போடுகின்ற அதிகாரம் சென்னை மாநிலத்திற்கு இருக்கிறதா? அப்படி போடுகின்ற உரிமை சென்னைக்கு இல்லை! பெரிய சர்க்காரான டெலலிககுத் தான் இருக்கிறது! அவர்கள் பாஷையிலே சொல்ல வேண்டுமானல் இந்தியில்—அது படே சர்க்கார், இது சோட்டே சர்க்கார்!

மாநில சர்க்காருக்கு அதிக உரிமைகள் தரப்பட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகிறது!

நாங்கள் சொல்லி வருகின்ற திராவிட நாடு திராவிடருக்கே என்னும் பிரச்னையில் பூதம் பிசாசு இல்லை—புரட்டு உருட்டு இல்லை!

அதிக அதிகாரம் மாநிலத்திற்கு வழங்கப்பட வேண்டும். அந்த அதிகாரம் சென்னை மாநிலத்திற்கு இல்லை,

எங்கள் வீட்டுத் தெரு விளக்கை அணைக்க வேண்டுமென்ருல் என்னல் முடியாது. ஏன் என்ருல் தெரு விளக்கிற்கான ஸ்விட்சு கொஞ்சம் உயரமான இடத்திலே இருக்கிறது.

தெரு விளக்கை அணைக்க வேண்டுமென்ருல், என்னைவிட சற்று உயரமானவர்கள் யாராவது வருகிருர்களா என்று பார்த்து—அவர் வந்ததும் 'நான் உள்ளே போகிறேன்—விளக்கை அணைத்து விடுங்கள்' என்று கூறி விட்டுச் சென்று விடுவேன்,

என்னுடைய நிலைமையிலே தான் சென்னை ராஜ்யம் இருக்கிறது. நமக்கு வெளிச்சம் வேண்டுமென்ருல், விளக்கை அணைக்க வேண்டுமென்ருல் வேறு ஆளை பார்க்க வேண்டியிருக்கிறது. சென்னையின் சுவிட்ச் டில்லியிலே நேருவிடமிருக்கிறது.

எத்தனை நாளைக்குத் தான் வேற்று ஆளை நம்பிக் கொண்டு இருக்க முடியும்? நாமேவிளக்கை அணைப்பதற்கும். ஏற்றுவதற்கு தக்கபடி நம் கைக்கு எட்டுகின்ற இடத்திலே ஸ்விட்ச்சை வைத்துக் கொள்ள வேண்டும். அதைத் தான் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லி வருகிறது!

வீட்டிலே தேளைப் பார்த்து, மனைவி தேள், தேள்' என்று பதறினல், கணவன்—தெருவில் ஆம்பளை இருந்தால் கூப்பிடு என்று மனைவியிடம் சொன்னல் மனைவி அந்தக் கணவனைப்பற்றி என்ன நினைப்பாள்? திருப்பிக் கேட்க மாட்டாளா நீ என்ன ஆண் மகனு பெண்ணு என்று!

விலைவாசி ஏறி விட்டதே—கைக்கு எட்டாத தூரத்தில் இருக்கிறதே என்று சென்னை சர்க்காரைக் கேட்டால் இரு இரு டெல்லிக்கு போய் வருகிறேன் என்கிருர்கள். இது ஆம்பளையை விட்டே ஆம்பளையை கூப்பிடுவது போல் இருக்கிறது!

காமராசர் சர்க்காரே உரிமை பெறு. முழு உரிமை பெற்ருல் தான் மக்கள் நிம்மதியாக வாழ முடியும் என்று நாம் கூறி வருகிருேம்! இதைச் செய்தால் மக்கள் வரவேற்பார்கள்.

திராவிட நாடு பிரிந்தால் என்ன லாபமென்று கேட்கிருர்கள்! இப்போது ஒன்ருக இருப்பதாலே என்ன லாபம்? பிரிந்தால் நஷ்டம் என்று அவர்கள் சொல்லுவதைக் கேட்டுக் கேட்டு சலித்து விட்டேன். பிரிந்தால் இன்னின்னது நஷ்டம் என்பதை அவர்கள் சொல்லவில்லை? பிரிவதாலே உங்களுக்கு என்ன லாபமென்று கேட்கிருர்கள். அவர்கள் பாஷையிலே சொல்ல வேண்டுமானல் ஆத்ம திருப்தி என்பேன்!

காந்தி ஏன் சுதந்திரம் கேட்டார்? தசரதன் காலத்திலே இல்லாத தபால் போக்குவரத்து வெள்ளைக்காரன் காலத்திலே ஏற்பட்டது. ராமன் காலத்தில் இல்லாத ரயில், அரிச்சந்திரன் காலத்தில் இல்லாத ஆகாய விமானம், இவ்வளவும் வெள்ளைக்காரன் காலத்தில கிடைத்தது. இத்தனையும் தந்த வெள்ளைக்காரன் ஏன் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டுமென்று காந்தி சொன்ஞர்? எங்கள் நாடு எங்களுக்காக வேண்டுமென்ருர். என்னுடைய ராஜ்யம் என்று சொல்லிக் கொள்வதிலே இருக்கும் பெருமை வேறு எந்த நல்ல ராஜ்பத்திலும் இல்லை என்று கூறினர்!

அதைப் போல் நமது நாடு நமதாக வேண்டும். ஐ. நா. சபையிலே இந்தி ஒலிப்பதற்கு பதிலாக தமிழ் ஒலிக்க வேண்டும்! மனுஸ்மிருதியின் மேன்மைக்கு பதிலாக குறளின் பெருமை பரவ வேண்டும்! கனிஷ்கனின் வீரத்திற்கு பதிலாக சேரனின் வீரத்தை கூறிட வேண்டும்!

இப்படி பேசுவதாலே என்ன லாபமென்று கேட்கக்கூடும். பேசுவதினலே நஷ்டம் ஒன்றுமில்லை!

என் நண்பர் ஒருவர் சர்க்கரையினல் மைசூர் பாக் செய்தால் என்ன, ஜிலேபி செய்தால் தான் இனிக்குமா என்று கேட்டார். நான் திருப்பிக் கேட்டேன் ஜிலேபி செய்ததால் இனிப்பு குறைந்து விட்டதா? என்றேன். அதைப்போல் நீங்கள் ஜிலேபி சுடுவதற்கு நினைத்தீர்கள் முடிய வில்லை. அதனலே மைசூர்பாக் செய்தால் என்ன என்று கேட்கிறீர்கள்.

நமது முன்னேர்கள் வீரத்தோடுவாழ்ந்தவாகள்; அந்த வீர பரம்பரையிலே வந்தவர்கள் நாம் என்பதை அகில உலகத்தோரும் அறிய வேண்டும்.

ஓடியாடி ஒருவர் வேலை பார்க்கிருர் என்ருல் எதற்காக? நம்மால் செய்ய வேண்டிய, செய்ய முடிந்த காரியத்தை செய்து முடித்து விட்டோம் என்னும் மனத்திருப்திக்காக! விடுதலை பெற வேண்டு மென்பது லாப நஷ்டக்கணக்கை எதிர்ப்பார்த்து அல்ல! நமது இனப்பெருமையை மற்றவர்கள் உணர வேண்டுமென்பதற்காகத்தான் இப்படி பேசி வருகிருேம்.

பிரிந்தால் வாழ முடியுமா என்று சிலர் கேட்கிருர்கள். பிரிந்தால் வாழ முடியுமா என்று கேட்கின்றவர்களுக்கு அண்மையில் சுதந்திரம் பெற்று ஐ. நா. விலே அங்கம் வகிக்கும் சின்னஞ்சிறு நாடு தங்கநீகாவைப் பற்றி நண்பர் நடராசன் உங்களிடம் கூறினர்கள்.

ஐ. நா. விலே எத்தனை நாடுகள் அங்கம் வகித்திருக்கின்றன! அவைகளை பார்த்து, அந்தந்த நாடுகளின் பரப்பையும் ஒப்பிட்டுப் பார்த்தால் புரியும் திராவிட நாடு பிரிய வேண்டுமென்று கூறுவது சரியா. இல்லையா என்பது!

நம்மை விட குறைந்தவர்கள், வளத்தில், பண்பில் குறைந்த நாடெல்லாம் தனியரசு பெற்று தனியாக அரசாளுகின்றன!

எல்லாம் இருக்கின்றன நாம் பிரிந்து போவதிலே—தனியாட்சி செலுத்துவதிலே நஷ்டமொன்று மில்லை லாபமிருக்கிறது! நமக்கு மட்டுமல்ல உலகத்திற்கே லாபமிருக்கிறது!

ஆகவே நாம் சொல்லி வருகின்ற லட்சியம் நிறை வேறும் என்னும் புதிய நம்பிக்கை வளர்ந்து கொண்டே வருகிறது! அந்த புதிய நம்பிக்கை மேலும் வளர்வதற்கு தோழர்கள் புதிய உற்சாகத்தோடு பணிபுரிய வேண்டும், அந்த முயற்சிக்கு இப்படிப்பட்ட படிப்பகத் தோழர்கள் துணை நிற்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தையும், கிரு.முனுசாமி தந்திருக்கிற வரவு—செலவு கணக்கையும் ஊன்றி கவனித்தால் "உடனடியாக தென்னுடு பிரியவேண்டும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும்" என்ற எண்ணம் தான் பொதுமக்களிடத்தில் அரும்பி. பூத்து. குலுங்கும் என்பதை அனைவரும் அறிவார்கள்!

இதற்கான சந்தர்ப்பம் இன்னும் இரண்டாண்டு காலத்தில் வர இருக்கிற பொதுத்தேர்தலில் கிடைக்க இருக்கிறது! பொதுமக்கள் விழிப்போடு பணிபுரிந்தால் நல்வாழ்வு கிடைக்க இன்னும் இரண்டே இரண்டு ஆண்டு தான் இருக்கின்றன! அந்த நலவாழ்வுக்கான பணிகளை "இன்றே செய்யுங்கள், இன்றே செய்யுங்கள்" என்று வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேம்!

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ. இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ், 40 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு. சென்னை